இருபதாம் நூற்றாண்டில் பாரதி

பிரேமா நந்தகுமார்

இருபதாம் நூற்றாண்டில் பாரதி

பிரேமா நந்தகுமார்

மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா
அறக்கட்டளை வெளியீடு
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

இருபதாம் நூற்றாண்டில் பாரதி / பிரேமாநந்தகுமார் / முதற்பதிப்பு ஏப்ரல் 2000 / வெளியீடு: மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா அறக்கட்டளை, இலக்கியத்துறை, தமிழ்பல்கலைக் கழகம், தஞ்சாவூர் -   விலை 25 /-

BIBLOGGRAPHICAL DATA

Title of the Book	: Irupatham Noortrandil Bharathi
Subject	: Essays
Author	: Prema Nandakumar
Language	: Tamil
Edition	: First Edition March 2000
Size of the Book	: Demy 1 x 8
Paper	: TNPL White Printing
Printers	: Arul Printers, Thanjavur
Publishers	: Mahakavi Bharathiyar Nootrandu Vizha Arakattalai Veliyeedu Literature Department, Tamil University, Thanjavur
Price	: 25 /-

உள்ளடக்கம்

1. அறிமுக உரை		....	4
2. முற்பகுதி:	1900 - 1950	....	6
3. பிற்பகுதி:	1951 - 2000	....	29
துணைநூற்பட்டியல்		....	56

இருபதாம் நூற்றாண்டில் பாரதி
அறிமுக உரை

முனைவர் து. சீனிச்சாமி,
பேராசிரியர் & தலைவர்,
இலக்கியத் துறை,
தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

இருபதாம்நூற்றாண்டு முளைக்கும்போது, ஓர் ஆலமரமாய் முளைத்து, விழுதுவிட்டு, தமிழ்நாட்டு மண்ணெங்கும் ஊன்றி நிற்பவன் சனநாயகயுகக் கவிஞன் சி. சுப்பிரமணியபாரதி. பாரதியின் நூற்றாண்டு விழாவை ஒட்டித் தமிழக அரசு விரிந்து பரந்த மனத்துடன் பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கு அறக்கட்டளை வழங்கி பாரதி பற்றிஆண்டுதோறும் ஆராயும் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தது. அதன் சார்பில் அமைக்கப்பெற்ற சொற்பொழிவே "இருபதாம் நூற்றாண்டில் பாரதி பற்றி நிகழ்ந்த ஆய்வுகளின் போக்கினை, இரண்டு சொற்பொழிவுக்கால அளவுக்குள் மக்களுக்கும் கல்வித்துறையினர்க்கும் இந்நூல் சுருக்கமாக அறிமுகப்படுத்துகிறது. நூல் வடிவுற்றிருக்கும் இச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியவர் முனைவர் பிரேமா நந்தகுமார் அவர்கள். இலக்கிய மேதை கே. ஆர். சீனிவாச அய்யங்காரின் புதல்வி என்ற பெருமை அவருக்கு இருந்தாலும், தனக்கென ஓர் தனியான இலக்கிய ஆளுமை கொண்டவராக பாரதி ஆய்வில் தன்னைத் தோய்த்துக் கொண்டவராக விளங்குபவர் திருமதி பிரேமா நந்தகுமார் அவர்கள். தமிழ்ப்ப பல்கலைக்கழக இலக்கியத்துறையின் சார்பில் நிகழ்ந்தஅறக்கட்டளைச் சொற்பொழிவாற்றி எங்களுக்குச் சிறப்புச் செய்தவர். சமையல் கூடத்தையே ஆய்வுக்கூடமாக மாற்றி, பெண்ணின் ஆற்றல் எந்த வகையிலும் ஆணுக்குக் குறைந்ததல்ல என்று நம் கண்முன்னே, தன் எழுத்துக்களால், மெய்ப்பித்து வருபவர். பழமையின் மூட்டங்களுக்குள் தங்களைஒளித்து வாழ எண்ணும் பிற்போக்கு மரபு வாதிகளை விமர்சிக்கும் பாரதியின் எழுத்துக்களில் உள்ள பாட்டு மதிப்புகளை ஆராய்ந்து காட்டும் ஒரு முற்போக்கு மரபுத் திறனாய்வாளர் திருமதி. பிரேமா நந்தகுமார் அவர்கள். இருபதாம் நூற்றாண்டுக் காலத்தை இருபிரிவாகப்பிரித்து, பாரதியை அவர் பற்றிய ஆய்வுகளினூடாக அறிமுகப்படுத்துகிறார். எல்லா ஆய்வுநூல்கள் பற்றியும் இரண்டு உரைகளில் காட்டமுடியாதுதான்; ஆயினும் பொதுப்போக்குகளை

முனைவர் பிரேமா நந்தகுமார் அவர்கள் தெளிவாகச் சுட்டிடக் காட்டுகிறார். பாரதியின் முதல்பாடலான ஈதனிமையிரக்கம்' "ஓட்டக் கூத்தர் காலத்துப் பாடல் நடையாகஞ் முதலில் வந்து பின்னர் 1905 - ல் 'வங்கமே வாழிய' - கவிதையில் "நேருக்கு நேர் பேசுவதுபோல அமைந்தபாடலாக" மாற்றமுற்ற நிலையை - சனநாயக உணர்வுத்திறப்பின் எளிய கூறிய மொழியாக பாரதியின் கவிதை ஆளுமை பல்கிப் பெருகியதை - இச் சிறு நூல் நன்றாக விளக்குகிறது. பாரதியின் கவிதை ஆளுமையை "பல்முனை ஆளுமை" என்றும் "ஆயிரமிதழ்த் தாமரை" என்றும் நூல் ஆசிரியர் கணித்திருப்பது பொருத்தமானதேயாகும். பாரதியை ஒரு பொறிக்குள் அடைப்பது முடியாது. பாரதி மகாகவியா என்ற விவாதம், பாரதியும் பிராமணனே கன்ற விவாதம், பாரதி வேதாந்தியா என்ற விவாதம் - என முக்கிய விவாதங்களும் பொருத்தமான கூற்றுக்கள் வழி வாசகர்க்குச் சற்று விழிப்பூட்டலாகத் தரப்பெற்றுள்ளன. பாரதி ஆய்வு என்ற பெயரில் நடந்த மோசடிகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இலக்கிய ஊழல்கள் பற்றித் தனிநூலே வந்துள்ளதை வாசகர் அறிவர் இனி, ஒரு கவிஞன், வாசகன் மனத்துக்குள், அனுபவங்களுக்குள் உண்மையாகத் கலக்காவிட்டால் அவனைப் பற்றிப் பேசி, எழுதி என்ன பயன்? ஆனால், திருமதி பிரேமா நந்தகுமார்க்குப் பாரதி ஓர் அனுபவம். பாரதி பாடல்களைப் படிப்பது ஒரு வேள்வி. "இந்த வேள்வியில் பங்கு பெற்றால் வாழ்க்கையில் ஆனந்தமும் அன்பும் ஒளிர்வதை நான் அனுபவித்திருக்கிறேன்" என்று கூறுகிறார். இந்த அனுபவமே பாரதிக்குக் காலத்தை வெல்லும் சக்தியைத் தரவல்லது. இந்த அனுபவம் பெறாத பேச்சும் எழுத்தும் கூட மோசடிதான். பாரதியை அடையாளம் காட்டிய திருமதி. பிரேமா நந்தகுமார் அவர்களுக்கு நன்றி.

து. சீனிச்சாமி

இருபதாம் நூற்றாண்டில் பாரதி

1. முற்பகுதி : 1900 - 1950

1957 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் ஆந்திரப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. ஆனர்ஸ் (ஆங்கில இலக்கியம்) தேர்வு எழுதிவிட்டு, சென்னையில் சில நாட்கள் தங்கியிருந்தேன். அதுவரை எனக்குத் தமிழில் பிரத்தியேகமான பரிச்சயம், ஈடுபாடு எதுவுமில்லை. வீட்டில் தமிழில்தான் பேசுவோம். கலைமகள், கல்கி வரும். கல்கியில் கல்கியின் கதைகளும், கலைமகளில் குமுதினியின் கட்டுரைகளும் என்னை மிகக் கவர்ந்தவை. மற்றப்படி ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், தெலுங்குப் புத்தகங்களைப் படிப்பதில்தான் மும்முரமாக இருப்பேன்.

இந்த ஏப்ரல் மாதம் உறவினர்களுடன் மைலாப்பூரில் உள்ள லஸ் கார்னர் சென்றேன். என் தந்தையின் வழக்கத்தைப் பின்பற்றி அங்கிருந்த புத்தக்கடையில் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். கடையின் பெயர் நேரு நியூஸ் மார்ட். புத்தகங்களைக் கண்ணோட்டமிடும் போது ஒன்றரை ரூபாய்க்கு மலிவுப் பதிப்பு, பாரதியார் பாடல்கள் என்றிருந்தது. என்னுடைய காசுப்பைக்குப் பொருத்தமான விலை. திறந்து பார்த்தால் என்று தணியும் இந்த சுதந்திர தாகம் என்ற பாடல். அட, எம்.எஸ்.சுப்புலட்சுமி பாடுவாரே,இந்தப் பாடலை பாரதியார் இயற்றினாரா என்று என்னையே கேட்டுக்கொண்டேன். புத்தகத்தை வாங்கி மேலும் சில பாடல்களைக் கற்றுக் கொள்ளலாமே என்று தோன்றியது, வாங்கிவிட்டேன்.

இந்நூல் என்னிடம் இன்றுவரை பேசிக்கொண்டிருக்கிறது, பாடிக்கொண்டிருக்கிறது. நாற்பத்தி மூன்று ஆண்டுகளாக பாரதியுடையவும், அவர் பற்றியும் நூல்கள் சேகரித்து வருகிறேன், அவரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும், அவர் பற்றி எழுதியும் வருகிறேன். ஆயினும் அவர் விசுவரூபமாகவே இருக்கிறார்! அவரது எண்ணச் சுழற்சிகளை முழுமையாக அறிந்தேனில்லை. ஒவ்வொரு முறை படிக்கும் போதும் புதுப்பொருள், புது அழகு, புது ஆர்வம் தளும்புகின்றன.

சுப்பிரமணிய பாரதியார் 1921இல் காலமானார். இந்த எண்பது ஆண்டுகளில் தமிழில் நூற்றுக்கணக்கான கவிஞர்கள் தோன்றினர். அவர்களில் பலர் ஓரளவு புகழ் பெற்றனர். ஆனால், ஒருவராலும் இந்த நூற்றாண்டில், பாரதியாருக்குப்பின் வந்த இன்னாரது யுகம் என்று கூறுமளவுக்கு, அப்படியொரு பல்முனை ஆளுமை காட்டமுடியவில்லை. சுமார் கால் நூற்றாண்டிற்குமுன் சாகித்ய அக்காதெமி - யுனெஸ்கோ வெளியிட்ட எனது Poems of Subramania Bharati (1977) புத்தகத்தில் பாரதியாரைப் பற்றி நீண்டதொரு அறிமுகக் கட்டுரை எழுதி, அதைப் பின்வருமாறு நிறைவு செய்திருந்தேன்:

"And he died as he had lived, the hero as patriot and poet, and the great poet was doubled with the true bhaktha. But when he died, he had already given his name to a whole age and imparted to it the fervour and hope and puissance and dynamism of the New Life. And it is gratifying that the great Age of Bharathi has overflowed to the present day".

(பக்கம் 53)

2000 வது ஆண்டில் இப்பொழுது அடியெடுத்து வைத்திருப்பினும், இன்னும் பாரதி யுகத்தில்தான் இருக்கிறோம் என்பதாக இந்த மகாகவியின் விசுவரூபம் இந்நூற்றாண்டை நிறைத்து விளங்குகிறது. 1921இல் அவர் காலமானபோது, அவரது நூல்கள் அனைத்தும் அச்சாகவில்லை. இன்னும் கூட பாரதி புதையல் எங்கெல்லாமோ உள்ளன. கண்டு பிடிக்க வேண்டும். கிடைத்திருப்பதை நாம் இன்னும் முழுமையாகத் திறனாய்வு செய்தாகவில்லை. இந்த ஆயிரமிதழ்த்தாமரையான பாரதி இலக்கியத்தை முழுமையாகப் படிக்க இரண்டு கட்டுரைகள் போதா. ஆயினும் ஒரு அறிமுகமாக இருபதாம் நூற்றாண்டில் பாரதி பற்றிச் சிந்திப்போம்.

1900-1950 ஆண்டுகளை முற்பகுதியாகப் பார்ப்போம். 1900 ஆண்டு மலர்ந்தபோது, சுப்பிரமணிய பாரதியாரைத் துடிப்புள்ள இளைஞனாகக் காண்கிறோம். எட்டயபுரத்தில் பிறந்து, திருநெல்வேலியில் பள்ளிப்படிப்பு முடித்து, காசி சென்று அலகபாத் சர்வகலாசாலை பிரவேசப் பரீட்சையில் தேறி, அதற்குள் பெற்றோர் இழப்பு, வறுமை போன்ற துயரங்களில் உழன்று, செல்லம்மாளுடன் திருமணம் முடித்தாயிற்று. காசியில் இந்தி, ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றார். அச்சமயம் 1902இல் காசி வந்த எட்டயபுரம் ஜமீன்தார் அழைப்பை ஏற்று, சொந்த ஊர் திரும்பினார்.

பள்ளி நாட்களிலேயே பாடல் சொன்ன பிறவிக்கவிஞன். கவிதை புதுப் புனலாக அவரது மனதில் பொங்கியது. தமிழ், உறிந்தி, வடமொழி, ஆங்கிலச் செவ்விலக்கியங்களில் திளைத்த அவ்விளைஞனுக்கு, எட்டயபுரம் சமஸ்தானம் நெருஞ்சிக் காடாக இருந்தது. ஜமீன்தாரும் அவரைச் சூழ்ந்தவர்களும் கேவலமாக சிருங்கார ரசத்தையே விரும்பினார்கள். கம்பன், ஷேக்ஸ்பியர், கீதகோவிந்தம், ஷெல்லி என உயர்ந்த இலக்கியங்களில் ஈடுபாடு கொண்ட பாரதியாரன் மனத்திற்குக் "கூளப்பநாயக்கன் காதல்" போன்ற நூல்கள் சிறிதேனும் ரசமாக இல்லை.

ஜமீன்தாருக்குச் செயலர் போன்ற வேலையில் இருந்ததால், அச் சூழ்நிலையிலிருந்து விலகி நிற்கவும் முடியவில்லை. இதற்காகவே, தனக்கும் தன்னைபோன்ற நண்பர்களுக்கும் மாற்று தேடி "ஷெல்லியன் கில்டு" என்றொரு இலக்கிய அரங்கினை ஏற்படுத்தினார். "ஷெல்லிதாஸன்" என்ற புனை பெயரில் பாரதியார் கட்டுரைகள் எழுதியதாகவும் தெரிகிறது.

இந்த சமயத்தில் தான் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரின் தனிப்பாசுரத்தொகை (1901) பிரசுரமாகியிருந்தது. தமிழ் வாழ வேண்டும், வளர வேண்டும் என்று முழுமுச்சுடன் செயல்பட்ட சாஸ்திரியார், ஆங்கிலப் பாவினமான சானட்டை (sonnet) தமிழ் மொழிக்குக் கொண்டுவரச்செய்த முதல் முயற்சி. இதற்கு அவர் காரணமும் கூறுகிறார்:

"ஆங்கிலநூற் பயிற்சியுடைய தமிழ் மக்கள் தமிழ்மொழியைப் பெரிதும் கவனித்தலின்றிக்கைசோர விடுகின்றனரெனப் பலருங்கூறும் வசைமொழி எம் செவிப்படலும் மனம் பொறேம், புதுமைவழியால் ஏதேனும் செய்யவேண்டுமென்று புகுந்தேம். அங்ஙனம் புக்குழி யாம் அவ்வக்காலங்களிற் சிற்சில விடயங்களைப்பற்றிக் கொண்ட கருத்துக்களைச் செய்யுளுருவமாய்ச் செய்து வெளியிடலாமென்று உன்னினேம்."

(பக்கம் 21)

பரிதிமாற்கலைஞன் எனும் புனைபெயரில் வெளியான இந்நூலில் உள்ள செய்யுட்கள் முதலில் ஞானபோதினி இதழில் வெளியாயின. அறிஞர் ஜி.யு. போப் இவற்றை வரவேற்று கையோடு ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தது இந்நூலுக்குப் பெருஞ்சிறப்பு. அவர் இப்புதுமையை வரவேற்று எழுதுகிறார்:

"Doubtless, there are many of our worthy and learned friends who will say, that novelties are quite inadmissible in Tamil Literature, since the great Tamil Grammers have long ago stereotyped the laws of composition, and defined for all times the subjects, methods and style of Tamil Literature! But, when we come to reflect upon the matter, and consider it in the light of universal history, and the laws of human development, and especially in connection with the necessary spread and powerful influence of English literature, it does seem that even the Tamil Sarasvati, fast tied and bound though she be, may add yet something new, and distinctive of the present era, to the invaluable treasures she already possesses." [3]

(பக்கம் 10)

இந்நூலையும், போப் அவர்களின் அறிமுகத்தையும் பாரதியார் படித்திருக்கலாம். தனிப்பாசுரத் தொகையைப் பின்பற்றி அவரும் சானெட் எழுத முனைந்தார். 1904 ஆம் ஆண்டு விவேகபாநு எனும் பத்திரிகையில் பாரதியாரது முதல்பாடல் அச்சாகியது. தலைப்பு "தனிமையிரக்கம்." ஓட்டக்கூத்தர் காலத்துப்பாடல் நடை:

"குயிலனாய்! நின்னொடு குலவியின் கலவி
பயில்வதிற் கழித்த பன்னாள் நினைந்துபின்
இன்றெனக் கிடையே எண்ணில் யோசனைப்படும்
குன்றமும் வனமும் கொழிதிரைப் புனலும்
மேவிடப் புரிந்த விதியையும் நினைந்தால்
பாவியேன் நெஞ்சம் பகீரெனல் அரிதோ?
கலங்கரை விளக்கொரு காவதம் கோடியா
மலங்குமோர் சிறிய மரக்கலம் போன்றேன்
முடம்படு தினங்காள்! முன்னர்யான் அவளுடன்
உடம்பொடும் உயிரென உற்றுவாழ் நாட்களில்
வளியெனப் பறந்த நீர் மற்றியான் எனாது
கிளியினைப் பிரிந்துழி கிரியெனக்கிடக்கம்
செயலையென் இயம்புவல் சிவனே!
மயலையிற் றென்றெவர் வகுப்பரங் கவட்கே?"

அச்சில் தன் பாடலைக் கண்டபின் பாரதிக்குத் திருப்தியாக இருந்திருக்கும் என்று தோன்றவில்லை. தனிப்பாசுரத் தொகையில் போப் அவர்களின் வேறு சில வரிகள் அவரை இப்பண்டித நடையிலிருந்து விடுதலை பெறத் தூண்டியிருக்கக்கூடும். ஷெல்லி, பைரன் போன்ற கவிஞர்கள் ஏன் அவரது மனத்தை ஆட் கொள்கிறார்க்ள? போப்பின் முன்னுரையில் இக் கேள்விக்கு பதில் க்ண்டார்:

"...Comparing the effect of the English Literature, and especially of English poetry upon people of every class and of every age, we do venture to think that Tamil fails very greatly, and unnecessarily, in its most, legitimate and sacred function. It is adored by a very select few; has it entered, is it entering, can it enter, into the minds, hearts, and lives of the great mass of the men, women, and children of the Tamil lands? Many reasons may be assigned for this comparative failure, - if the fact of failure be conceded. Among these we venture, very humbly as foreigners, to express our opinion that Tamil verse, with all its incomparable ingenuity and elegance, generally fails in simplicity, intelligibility and adaptation to the wants of the popular mind".[3]

பாரதியார் இந்தக் குறிக்கோளை ஏற்றார். எளிமை வேண்டும். பொருள் தெளிவாக இருக்கவேண்டும். சாமானிய மனிதனின் வேட்கைகளுக்குச் சமாதானம் தரவேண்டும். இதற்குப் பரிதிமாற்கலைஞரின் சானட்டுகளே வழிகாட்டின. 'இரவு' எனும் பாசுரம்.

"ஞாயிறு மறைந்தது நண்ணுபே ரமைதிய
மாயிரு ஞாலமேன் மதியொளி பொழிந்தது
மின்னின விண்மீன் துன்னின நள்ளிருள்
மன்னின மனைதொறு மாவொளி விளக்கம்
குவிந்தன தாமரை அவிழ்ந்தன குமுதம்
மல்லிகை முல்லை மலர்ந்து கமழ்ந்தன..."

(பக்கம் 90)

எளிய, பொருள் விளங்கக் கூடிய தமிழில் எழுதிய ஆழ்வார்கள், நாயன்மார்கள், மணிவாசகர், தாயுமானவர், இராமலிங்க அடிகள் போன்றோர் முன்னோடிகளே. ஆனால் அவர்கள் மனிதனின் ஆன்மவேட்கையினைத் தீர்ப்பதில்தான் முனைந்திருந்தனர். அன்றாட வாழ்க்கையில் சாமானிய மனிதனுக்கு ஆயிரமாயிரம் பிரச்சினைகள். ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டுப்போன வாழ்வு, ஜாதி, மதம், மூடநம்பிக்கைகள், வறுமை, எதைப் பற்றி எழுதுவது? எங்கே தொடங்குவது?

எரிமலையாகக் கனன்ற பாரதியார் எட்டயபுரவாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது ஆச்சரியமாக இல்லை. 1904 இல் ஒரு சில மாதங்கள் மதுரையில் தமிழ்ப்பண்டிதர். நவம்பர் 1904 முதல் ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆசிரியராக இருந்த சுதேசமித்திரனில் துணையாசிரியராகப் பாரதியார் அமர்ந்தார். எங்கு ஆரம்பிப்பது என்ற கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது. ஐயர் அவர்கள் சிறந்த தேச பக்தர், சமூக சேவகர். பாரதியார் அரசியல், சமூக நலம் பற்றிய கட்டுரைகளைச் சுதேசமித்திரனுக்காக மொழி பெயர்ப்பதில் ஈடுபட்டு வெகுவேகமாக இவ்விரு துறையிலும் அறிவைப் பெருக்கிக்கொண்டார். ஒப்பற்ற மக்கள் கவிஞன் 1905 இல் அச்சான 'வங்கமே வாழிய' பாடலுடன் தோன்றினான். அது

"கண்ணினீர் துடைப்பாய் புன்னகை கொள்வாய்
கவினுறும் பாரதப் பெருந்தேவியே"

என நேருக்கு நேர் பேசுவதுபோல் அமைந்த பாடல்.

பாரதியாருடைய அரசியல் வேகத்திற்குச் சுப்பிரமணிய ஐயரது மிதவாதப் பத்திரிகையால் ஈடுகொடுக்க முடியவில்லை. பாரதியாருக்கோ, பாலகங்காதர திலகர், ஸ்ரீஅரவிந்தர், பிபின் சந்திரபால், லாலா லஜ்பத் ராய் போன்றோரே பாரதவிடுதலைப் போரின் மகாரதிகளாகத் தெரிந்தனர். 1905 இல் சகோதரி நிவேதிதையைக் கல்கத்தாவில் சந்தித்தபோதோ, பாரதிக்கு சக்தி தரிசனமே கிடைத்துவிட்டது. "ஒரு கடிகையிலே மாதாவினது மெய்த் தொண்டின் தன்மையையும் துறவுப் பெருமையையும் சொல்லாமல் உணர்த்திய குருமணி" என்று போற்றி, அவளைப்பபற்றிச் சாகாவரம் படைத்த செய்யுளொன்றும் இயற்றினார்:

"அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்
கோயிலாய் அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறா யெமதுயர்நா
டாம்பயிர்க்கு மழையாயிங்கு
பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப்
பெரும்பொருளாய்ப் புன்மைத் தாதச்
சுருளுக்கு நெருப்பாகி விளங்கியதாய்
நிவேதிதையைத் தொழுது நிற்பேன்"

சுப்பிரமணிய பாரதியாரின் ஆற்றல்கள் அடைபட்டு வீணாகிவிடாமலிருக்க மண்டையம் சகோதரர்கள் இந்தியாப் பத்திரிகையை 1906 ஆம் ஆண்டு தோற்றுவித்தனர். கல்கத்தாவிலிருந்து வெளியான ஸ்ரீஅரவிந்தரது வந்தே மாதரம் பத்திரிகை போன்று இந்தியா தழலெழுப்பியது. இந்தியாவுக்குத் துணையாகச் சக்கரவர்த்தினியும் பாரதியாரை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்தது. இரண்டிலும் பாரதியாரது தேசீய கீதங்கள் பிரசுரமாயின. ஆனால் தனது கவிதைகளை நூல் வடிவில் காணப் பாரதியாருக்கு ஆசை. போதுமான பொருள் வேண்டுமே!

பாரதியாரின் அப்பழுக்கற்ற தேசபக்தியை ஜி.ஏ. நடேசன் மூலம் அறிந்த வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர், பொருளுதவி செய்ய முன் வந்தார். கிருஷ்ணஸ்வாமி ஐயர் மிதவாதி. ஆனால் இந்த விஷயத்தில் அவர் தயங்கவில்லை. தேசபக்தி, தெள்ளுதமிழ். இங்கே குறுகிய அரசியல்த்திரை போடுவதோ? பாரதியாரே சில பாடல்களைப் பாடிக்கேட்ட ஐயர் சொன்னாராம்:

"இவ்வளவு அழகான பாட்டுக்களை ஏன் நீர் ஊறப்போட்டு வைத்துக் கொண்டிருக்கிறீர்? நாடெங்கும் பள்ளிகளிலும், பெண்களுக்குச் சங்கீதம் சொல்லிக் கொடுக்கும் தனிகர்களிடையிலும் இவைகளைப் பரவச்செய்ய வேண்டாமா? ஏன் சும்மா இருக்கிறீர்?"

(சித்திரபாரதி 1982, பக்கம் 38-41)

உடனே நூறு ரூபாய் கொடுத்துப் பாரதியாரின் மூன்று பாடல்களை ('மன்னுமிமயமலை', 'எந்தையும் தாயும்', 'வந்தே மாதரம் என்போம்') 15000 படிகள் உயர்ந்த தாளில் அச்சிட்டு இலவசமாக வினியோகிக்க ஏற்பாடு செய்துவிட்டார். இது நடந்தது 1907 இல். இப்பிரசுரம் விரிவுபடுத்தப்பட்டு, அடுத்த ஆண்டு 1908 இல் ஸ்வதேச கீதங்கள் என்று வெளியாயிற்று. இரு நூல்களுமே சகோதரி நிவேதிதைக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் பத்திரிகை ஆசிரியராக இருந்தபோது பாரதியார் ஓயாமல் எழுதி வந்தார். 1909 இல் புதுச்சேரி சென்ற பின்னரும் நிறைய எழுதினார். தனது எழுத்துக்கள் தண்ப்பட்ட முறையில் நூல்களாக வெளிவரவேணுமென்பது அவரது ஆர்வம். ஆனால் அது நடப்பது எளிதாக இல்லை. அவர் வாழ்ந்திருந்த காலத்தில் நூல் வடிவில் வெளியானவை சிலவே. அனேகமாக இந்நூல்கள் துண்டுப் பிரசுரங்களே (booklets). சீனி. விசுவநாதன் அவர்கள் க்காட்டியுள்ள வெளியீட்டு வரிசைப்படி இருபதே பிரசுரங்கள். அவற்றில் சில:

எங்கள் காங்கிரஸ் யாத்திரை (1908)
ஞானரதம் (1910)
கனவு (1910)
ஆறிலொரு பங்கு (1910)
பாஞ்சாலி சபதம் (1912)
கண்ணன் பாட்டு (1917)
மகாகவி ஸர் ரவீந்திரநாத் தாகூர் அருளிய பஞ்ச வியாஸங்கள் (1918) போன்ற மொழிபெயர்ப்பு நூல்கள் சில.

1914இல் வெளியான The Fox with the Golden Tail மாத்திரம் ஆங்கிலத்தில் இருக்கிறது. 1910 இலிருந்து ஸ்ரீ அரவிந்தருடன் புதுச்சேரியில் தொடர்பு ஏற்பட்டது. ஸ்ரீ அரவிந்தரது அற்புதமான ஆங்கில நடை பாரதியாரை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது. அவருக்கே நல்ல ஆங்கில ஞானம் உண்டு. புதுச்சேரியில் ஆங்கிலமொழிக்கட்டுரை, மொழிபெயர்ப்பு எழுத, இவற்றில் பல The Commonweal, Arya பத்திரிகைகளில் வெளிவந்தன. ஸ்ரீ அரவிந்தருக்கு அற்புதமான நகைச்சுவை உண்டு இந்தத் தாக்கமும் சேர, பொன்வால் நரி எனும் அங்கதத்தை பாரதியார் வெளியிட்டார். இந்நூல் அன்னிபெசண்டின் அரசியலையும், ஜே. கிருஷ்ணமூர்த்தி - நித்யானந்தன் சகோதரர்களை அந்த அம்மையார் வளர்த்தது பற்றியும் வரையப்பட்ட கேலிச்சித்திரம். சென்னையில் பரபரப்பாகப் பேசப்பட்ட இந்நூலுக்காக ஐநூறு படி கேட்டுக் கடிதம் வந்ததாம்! தம் தமிழ் நூல்களை அச்சிடமுடியாமல் நொந்திருந்த பாரதியார் குவளைக் கண்ணனிடம் வருந்தினாராம்:

"நான் என்னுடைய சொந்த பாஷையில் என் முழுமூளையையும் கசக்கிப் பிழிந்து 'பாஞ்சாலி சபதம்' எழுதியிருக்கிறேன். அது நன்றாக இருக்கிறதென்று ஒருவனும் ஒரு கடிதமும் எனக்கு எழுதவில்லை. அந்தப் புஸ்தகத்தை நீ ஒருவன்தான் வாசிக்கிறாய்! ஆங்கிலத்தில் எழுதின இந்தப் 'பொன் வால் நரி'க்கு 500 பிரதி உடனே வேண்டுமாம்!"

(சித்திர பா்ரதி, பக்கம்111)

கண்ணன் பாட்டு (1917) வெளியீடு பாரதியாரின் நெஞ்சுப் புண்ணுக்கு மருந்தாக இருந்திருக்க வேண்டும். இந்நூலுக்கு மிக அழகிய முன்னுரையை வ.வே.சு. அய்யர் வழங்கியுள்ளார்:

"கடற்கரையில், சாந்தி மயமான சாயங்கால வேளையில், உலகனைத்தையும் மோகவயப்படுத்தி நீலக்கடலையும் பாற்கடலாக்கும் நிலவொளியில், புதிதாகப் புனைந்த கீர்த்தனங்களைக் கற்பனா கர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியன் தன்னுடைய கம்பீரமான குரலில் பாடினதைக் கேட்ட ஒவ்வொருவரும் இந்நூலிலுள்ள பாட்டுக்களை மாணிக்கங்களாக மதிப்பர்..."

(சித்திர பாரதி, பக்கம் 104)

பாரதியார் மீது அரசியல் போராளி என்ற முத்திரை விழுந்துவிட்டதால், வெளியீட்டார்கள் நூல் வடிவில் அவரது கவிதைகளையும் கட்டுரைகளையும் வெளியிடத் தயங்கினார்கள். அரசியல் வாடை இல்லாத, தேசபக்தியும் சமூக சேவகமும் நிறைந்த ஆறிலொரு பங்கு நூலுக்கு ஏற்பட்ட கதி ஏற்பட்டால் என்ன செய்வது? 1911 ஆம் ஆண்டு இந்நூலும், கனவு எனும் நூலும் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டன.

இதற்கு ஒரு விந்தையான காரணம். ஆஷ் கொலை விசாரணையில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரிடம் இவ்விரு நூல்களும் இருந்தனவாம். அரசின் தலைமைச் செயலாளருக்கு டிபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் (புலனாய்வுப் பிரிவு) இந்நூல்களைத் தடைசெய்யக் கோரி இவ்வாறு எழுதினார்:

"I recommend the proscription, under the Press Act, of both the enclosed pamphlets 'Kanavu' and 'Arilorupangu'. The language of the former is openly 'reditions. The language of the later is granded, but the intention of the book is seditions. They were both written by C.S. Bharati in Pondicherry, and I have proof that they are being circulated from there. They have been found in Madura and Tirunelvelli and are mentioned in the correspondence seized in the Tirunelvelly case, and were found in the houses of some of the accused. They are evidently being widely sold.

They were printed in Pondicherry at the Sarasvati Press which printed the prescribed papers **INDIA** and **VIJAYA**."

அச்சமயம் சென்னை மாகாணத்தின் அட்வகேட் ஜெனரலாக இருந்த பி.எஸ். சிவஸ்வாமி அய்யர் தடையை அமல் செய்யுமாறு கூறிவிட்டார். போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட்டின் படி அனைத்துப்படிகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

பாரதியார் தமது நூல்களில் அரசியலேதும் இல்லை, இவை சமூக விழிப்புணர்வுக்காக எழுதியவை என்று பலமுறை வாதாடியும் பயனில்லாமல் போயிற்று. ஹிந்து பத்திரிகையில் 8 அக்டோபர் 1912 அன்று கடிதமெழுதியும் அரசாங்கம் அசைந்து கொடுக்கவில்லை. இந்நூலைத் தடைசெய்தது புதுச்சேரி அன்பர்களுக்குக் கசப்பான அனுபவம். இந்தியர்களில் ஆறில் ஒரு பங்கைத் தீண்டத்தகாதவர் என்று ஒதுக்குவதும், அவர்கள் மிக அசுசியான சூழ்நிலையில் வாழ்வதும் பற்றி ஸ்ரீஅரவிந்தர் 1919 இல் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். இவர்களைக் கைதூக்கிவிட்டாலன்றி நமது சமுதாயத்தின் ஆன்மிகம், அறிவு ஜீவன், நன்னெறி, புறவாழ்வு ஏதும் உயரப்போவதில்லை என்றார். ஆனால் இக்கருத்துக்கள் ஏதும் அரசாங்கத்திற்குக் கேட்கவில்லை. "ஆறிலொரு பங்கு" நூலின் மேல் போட்ட தடை நீங்காமலேயே பாரதியார் 1921 இல் காலமானார். அவர் உயிருடன் இருந்தபோது கடைசியாக வெளியான நூல் கதாமாலிகா. சிறுகதைகள், கட்டுரைகள் அடங்கிய இந்நூலை 1920 இல் சுதேசமித்திரன் வெளியிட்டது.

1921 ஆம் ஆண்டு பாரதியார் காலமான பின்னர், அவரது மேதா விலாசத்தை நன்கு அறிந்திருந்த தீரர் எஸ். சத்தியமூர்த்தி, கொடியாலம் வி. ரங்கசாமி ஐயங்கார் முதலியோர் பாரதியாரின் குடும்பம் வறுமையில் தவிப்பது கண்டு, நூல்களை வெளியிடும்படி யோசனை கூறினார்கள். பாரதியாரின் மனைவி செல்லம்மாளும் அதற்கான அறிக்கைகள் வெளியிட்டார். திரு. வி.க. அவர்கள் தமது நவசக்தி இதழில் பாரதியார் பற்றி எழுதி உதவினார்:

"ஸ்ரீமான் பாரதியார் ஐரோப்பாவிலேனும் அமெரிக்காவிலேனும் பிறந்திருப்பாராயின் அவருக்கு இதுகாலை எத்தனை ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்பதை நாம் கூற வேண்டுவதில்லை. தமிழ் நாட்டாரிடமிருந்து அவ்வளவு பெரிய நன்றியறிதலை நாம் எதிர்பார்க்கவில்லையாயினும், அவருடைய நூல்கள் நல்ல முறையில் வெளிவருதற்கேனும் போதிய துணை புரிவார்கள் என்று நம்புகிறோம்."

(பாரதி நூல்கள் விவரக் கோவை, 1987, பக்கம் 54)

செல்லம்மா பாரதியின் பாரதிஆசிரமப் பிரசுரங்களுக்கு நல்ல மதிப்புரைகள் வந்தன. செல்லம்மாளால் இப்பணிக்கு ஈடுகொடுக்க முடியாமற்போனபோது, பாரதியின் சகோதரர் விசுவநாத ஐயர் இப்பணியை மேற்கொண்டார். இச் சரித்திரத்தின் முழு விவரத்தையும் சீனி. விசுவநாதனின் பாரதி நூல்கள் விவரக் கோவையில் காண்கிறோம். பாரதியின் இதுவரை அச்சிடப்படாத குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் இரண்டாம் பாகம் தவிர, அவரது ஆங்கிலக் கட்டுரைகளையும் மொழிபெயர்ப்புகளையும் Agni and Other Poems மற்றும் Essays and Other Fraguments என வெளிக் கொணர்ந்தது பெரிய சாதனையே. ஆக, இருபதாம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகள் பாரதியாரது நூல்களை வெளிக் கொணர்வதிலேயே செலவழிந்தன.

அதே சமயம், பாரதிஆய்வும் இந்த காலகட்டத்திலேயே ஆரம்பித்தது எனலாம். பண்டிதர்கள் முகம் சுளித்தார்களோ என்னமோ, நாமறியோம். ஆனால், பாரதியார் உயிருடன் இருந்தபோதும், அவர் மறைந்த பின்னரும் தமிழகத்தின் விடுதலை வீரர்களைச் சொடுக்கி எழுப்பியது இப்பாடல்களே. அரசாங்கத்தின் அடக்குமுறையும் சேர்ந்து கொள்ளவே, பாரதியார் மக்கள் கவிஞராக அறியப்பட்டார். அவரது பாடல்கள் புகாத இடமில்லை. இந்தக் காரணத்தினாலேயே அவர் விடுதலைப் பாடல்களே எழுதினவர் என்று நினைக்குமளவு ஆகிவிட்டது. இதே காரணமாக, அவரைப் பற்றி எழுதினால் அரசாங்கத்திற்குக் கோபம் வரக்கூடும் என்று கூடப் பல ஆய்வாளர்கள் நினைத்திருக்கக்கூடும்.

பாரதியார் பற்றிய முதல் நூல் என்ற வகையில் சோமசுந்தர பாரதி, வி. சக்கரை, பரலி சு. நெல்லையப்பர் முதலியோரது கட்டுரைகள் இணைந்த பாரதியார் சரித்திரத்தைக் குறிப்பிடலாம். இது 1928 ஆம் ஆண்டு வெளியானது. அதேஆண்டு, தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் மெட்ராஸ் லெஜிஸ்லேடிவ் கவுன்சலில் பாரதி நூல்களுக்கு அரசாங்கம் விதித்த தடையை எதிர்த்துப் பேசினார். இச்சமயம் மகாத்மா காந்தியின் Young India பத்திரிகையில், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் தடையைக் கண்டித்தும், பாரதியின் கவிதையைப் புகழ்ந்தும் எழுதி, பதினெட்டுப் பாடல்களுக்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் வெளியிட்டார். பாரதியாரைத் தேசபக்தராக மாத்திரம் காண்பது சரியல்ல என்றார். பாரதியால் தமிழ் மொழிக்குப் புதியதொரு தெளிவு பிறந்தது, அவரது சமூக சீர்திருத்த இலட்சியம் ஒப்பற்றது என்று அவர் எழுதினார்:

"Subramanya Bharati was the poetical expression in the South, of the Indian national awakening in this century. He was poet laureate of the Tamil country crowned by the unanimous approbation and love of the people. His songs are sung by young and old throughout the land, in homes and at public gatherings. Their hold on the popular mind is great and lasting, and transcends the divisions of creed and caste. Bharati was a Brahman but his poetical genius was permeated by an unflinching spirit of equality. Freedom and equality of the high and the low castes, of men and women, were the hunger of his soul and the inspiration of all that he sang. Breaking boldly away from old - time stiffness of form and thought, Bharati adapted the spoken tongue and folk - music to the aspirations of India ." [5]

(Bharati - the Tamil Poet, 1979, P. 1)

மொழி பெயர்ப்புக்களான முன்னுரையில் "வந்தே மாதரம் என்போம்" பாடலைத் தமிழர்தம் தேசிய கீதம் என்கிறார்.

தொடர்ந்து C. விஸ்வநாத ஐயர், ஆக்கூர் அனந்தாச்சாரி, சுத்தானந்த பாரதியார் முதலியோர் சிறு அளவிலான நூல்களை வெளியிட்டனர். ஆனால் முதன் முதலாக ஆய்வுக் கண்ணோட்டம் தென்படுவது 1937 இல் வெளியான கண்ணன் என் கவி என்கிற நூலில் எனலாம். இதை, கு.ப. ராஜகோபாலன், பெ. கோ. சுந்தரராஜன் இருவரும் எழுதினர். இன்றும் கூட மனத்திற்கு உற்சாகமளிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் நூலுக்கான குறிப்பைச் சுவைபடக் காட்டுகிறார்கள்:

"நாங்கள் கையாளத் துணிவு கொண்டவேலை மகத்தானது - புதியது நவீன முறை இலக்கிய விமரிசனத்தில் - அதிலும் பாரதி விமரிசனத்தில் - முதல் ஏர் ஓட்டும் வேலை. நாங்கள் எண்ணின அளவு விஸ்தரிப்புடன் அதை நாங்கள் பூர்த்தி செய்யவில்லை என்பதை நாங்கள் அறிவோம். நாத்து விட்டுவிட்டோம். நடவு தானாக நடக்கிறது. எங்கள் கருத்துக்களும் நாத்துகள் போல — இந்த நாத்தங்காலில் - நெருங்கி இருக்கின்றன. காலம் வரும்பொழுது பிடுங்கி நடவேண்டும".

(கண்ணன் என்கவி, 'குறிப்பு')

பாரதி பரிசீலனை ஆய்வுகளுக்கு வளமான நாற்றங்காலாக நூல் அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. முதல் பதினொன்று கட்டுரைகள் கு.ப. ராஜகோபாலன் எழுதியவை. இவை பாரதியாரின் பன்முக ஆற்றலை அறிமுகப்படுத்துகின்றன. ஆனந்த விகடனில் ரா. கிருஷ்ணமூர்த்தி பாரதி உலககவி அல்ல என்று எழுதப்போக, பலவிதமான பதில்கள் தோன்றின. பாரதியார் மகாகவியா, நல்ல கவி மாத்திரமா, தேசகவியா என்ற விவாதங்கள் பத்திரிகைகளில் வந்ததால் பாரதி பற்றிய தமது எண்ணங்களுக்கு ஒரு கட்டமைப்புத் தர முயல்வதாகக் கு.ப. ராஜகோபாலன் சொல்கிறார். நீண்டகாவியம் படைப்பதால் மட்டும் ஒருவன் மகாகவி ஆவதில்லை. சிறந்த தேசபக்திக் கவிதைகள் எழுதும்போது கூட, ஒரு மகாகவியின் தீர்க்க தரிசனத்தைப் பாரதியிடம் காண்கிறோம் என்கிறார்: "காந்தி தோற்றத்தின் அடியை மட்டும் பார்த்த பாரதி தனது தீர்க்க தரிசனத்தால் சத்தியாகிரகத்தின் பூரண பலத்தையும் ஊஹித்துப் பாடிவிட்டார்"

(கண்ணன் என் கவி, பக்கம் 23)

மற்றப்படி பாரதியாரின் கவிதைகள் "இனிப்பின் தொகுதி ":

"கண்ணன் பாட்டு, குயில் பாட்டு இவைகளே இத்தொகுதியின் அடி; சக்திப்பாட்டு முடி."

கு.ப. ராஜகோபாலனின் நாற்றங்காலிலிருந்து எடுத்து நட்டவை தளதள என்று வளர்ந்தாலும், ஏனோ அவர் வேதரிஷிகளின் கவிதை பற்றிக் கூறியதைச் சமீபகாலம் வரை யாரும் கவனிக்கவில்லை.

"வேத ரிஷிகளின் கவிதை பாரதியின் உள்ளத்தை உருக்கி வார்த்திருக்கிறதென்பதில் சந்தேகமேயில்லை வேத ரிக்குகளின் கருத்தையமைத்து அவர் பாடியிருக்கும் வேள்விப் பாட்டுக்கள், நம்மை அந்த வேத காலத்திற்கே கொண்டு சென்று மெய்மறக்கச்செய்கின்றன. அவைகளில் உலகத்தின் உதய காலத்துப் பொருள் பொதிந்திருக்கிறது. தூயத் தொழிலும் தொனியும் கொண்ட அந்தப் புனிதர்களின் வாக்கு, பாரதியின் தமிழ்ச் சொல்லில் பூர்ண ஆர்வத்துடன் எழுந்து புனர் நிர்மாணம் கொள்ளுகிறது. இயற்கையின் பிரத்தியட்ச தரிசனங்களைக் கண்டு குழந்தைகள் போல் கொண்டாட்டம் கொண்ட அந்த ரிஷிகளின் கற்பனை, பாரதியின் கவிதையில் நிலைக்கண்ணாடிபோல் பிரதிபலித்துக் கொள்ளுகிறது. அவருடைய சக்தி தத்துவத்தின் உதயத்திற்கே வேத ரிஷிகளின் கவிதைதான் காரணமென்று எனக்குத் தோன்றுகிறது."

(கண்ணன் என் கவி, பக்கம் 23 - 4).

நான் இந்த வகையில் பாரதியாரைப்பற்றிக் கட்டுரைகள், சிறப்புச் சொற்பொழிவுகள் செய்திருந்தாலும், சமீபத்தில் தான் நூல் வடிவில் இப்பொருளை ஏந்தி, பெ.சு. மணியின் விரிவான, பாரதி இலக்கியத்தில் வேத இலக்கியத்தின் தாக்கம் (1998) வெளிவந்திருக்கிறது.

பெ.கொ. சுந்தரராஜனது "பாரதியின் இலக்கிய பீடம்" பதினான்கு கட்டுரைகளில் கவிதைத்தத்துவ ஆராய்ச்சிக்கு நம்மை அழைக்கின்றன. வேற்று மொழிக் கவிஞர்களுடன் ஒப்பீடு செய்கின்றன. பாரதிக்கும் மில்டனுக்கும் உள்ள ஒற்றுமைகளைக் காண்பித்து ஏன் தமிழர்களே பாரதிக்கு மகாகவி பட்டம் தரத் தயங்குகிறார்கள் என்று யோசித்து, சுந்தரராஜன் அவர்கள் எரிச்சலுடன் கூறுகிறார்:

"பாரதி செய்த குற்றம் ஒன்றுதான். தமிழில் எழுதினார்."

பாரதியார் தோன்றியிருக்காவிட்டால் தமிழ் புத்துயிர் பெற்றிருக்காது. கண்ணனைப் பற்றிப் பாடினாலும் சரி, சிட்டுக்குருவி பற்றிப் பாடினாலும் சரி, காளியின் ஊழிக்கூத்தில் மெய்மறந்தாலும் சரி, சொல்லும் பொருளும் ஒருங்கிணையும் சித்து பாரதியின் கவிதையில் நடக்கிறது. அவரால் நவரஸங்களையும் இயற்கையாக வெளிப்படுத்த முடிகிறது

பாரதியார் உலககவிதான் என்று அழுத்திக்கூற கு.ப.ராஜகோபாலனும் பெ.கொ. சுந்தரராஜனும் பலஉலகக் கவிகளை மேற்கோள்காட்டி, படிப்படியாகத். தங்களது விமரிசன அலைகளை வரிசைப்படுத்துகிறார்கள். ஆனால் பாரதிதாசனோ 'மகாகவி' என்றொரு ஆற்றல் வீச்சுள்ள கவிதையே எழுதிவிட்டார்:

"ஞானரதம் போலொரு நூல் எழுது தற்கு
நானிலத்தில் ஆளில்லை, கண்ணன் பாட்டுப்
போல் நவிலக் கற்பனைக்குப் போவ தெங்கே?
புதிய நெறிப் பாஞ்சாலிசபதம் போலே
தேனினிப்பில் தருபவர் யார்? மற்றும் இந்நாள்
ஜெயபே ரிகைகொட் டடாஎன் றோதிக்
கூனர்களும் குவலயத்தை அளாவும் வண்ணம்
கொட்டிவைத்த கவிதைதிசை எட்டும் காணோம்! "

பாரதியைப் பற்றிச் சொல் வீச்செறிக்கும் மேலும் பல பாடல்களை பாரதிதாசன் எழுதியிருக்கிறார். இந்த மகாகவி சர்ச்சையினால் விளைந்த நன்மைகளில் மற்றொன்று வ.ரா.வின் மகாகவி பாரதியார் (1944); கவிஞரின் ஜீவிய சரித்திரத்தை விரிவாகக் கூறுவது. ஒரு புதினத்தின் சுவையளிக்கும் தமிழ் நடை. இதில் சில சரித்திரப் பிழைகளுண்டு என்பார்கள். ஆனால், வ.ரா.வின் பாரதி பக்தி முழு மூச்சுடன் இயங்குவதால் குறைகள் நம் கண்ணில் படுவதில்லை. பாரதியார் கூறியதாக ஆளப்படும் பல வாக்கியங்கள் இந்நூலிருந்துதான் தோன்றின.

"ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு இன்னும் எவ்வளவு காலம் ஆங்கிலத்திலேயே பேசவேண்டும்? "

"நயமாய் என்னை ஏய்த்து வேலை வாங்குவதில் அய்யர் ரொம்ப கொம்பன் என்றாலும், பத்திரிகைத் தொழிலில் எனக்குப் பழக்கமும் தேர்ச்சியும் வரும்படி செய்தவர் அவர்தான். அவரை நான் ஒருவகையில் பரமகுருவாக மதிக்கிறேன். "

வ.ரா. அவர்களது நடை மறக்கமுடியாத படி பளீரென்று மின்னும். அவர் கூறுவதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தாலும், அதை மறக்கமுடியாது. அப்படி அவரது வாக்கியங்கள் நம்மைச் சுழன்று வருகின்றன. ஒரு எடுத்துக்காட்டு, இராஜாஜி பாரதியை ஒரு கனிந்த வேதாந்தியாகக் கவியின் இறுதி நாட்களில் கண்டார். இது வ.ரா.வுக்கு சமாதானமில்லை:

"பாரதியார் ஆஷாட பூதி வேதாந்தியே அல்ல. அவர் மகாகவி. அவர் இணையற்ற கலைஞன். உலகத்தை ஆண்டு அனுபவிக்க வந்த உத்தமன். எனவே, ராஜாஜி போன்றவர்கள் செப்பிடுவித்தை செய்து, பாரதியாரை வேதாந்தச் சிமிழிலே போட்டு அடைக்க வேண்டாம். "

(மகாகவி பாரதியார் பக்கம் 103)

இராஜாஜி மட்டுமல்ல, வ.ரா.வின் வேகத்தில் பாரதி ஆர்வலர்களான சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார் முதலியோரைக் கூடத் தமது நூலில் சற்று இறக்கிவைத்துப் பேசுவார். 'மகாகவி' சொற்போர் காரணமாக இச்சொல்லை மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறார்.

"பாரதியாரின் கவிதை உள்ளம் நவரஸங்கள் வழியாக வழிந்தோடி வெள்ளப் பெருக்கு எடுத்திருப்பதை அவருடைய பாடல்களில் காணலாம். கவிஞர்களில், ரஸத்தை உடைத்து உடைத்து பின்னப்படுத்திக் காட்டும் பேர்வழி அல்ல பாரதியார். அந்தந்த ரஸத்தின் சாயையை, அல்லது மூர்ச்சை ஸ்தானத்தை மட்டும் பாரதியார் காண்பிக்க மனங்கொள்ளார். அவைகளின் பூரண உருவத்தையும், தன்மையையும் வலுவுடனும் பொலிவுடனும் வரையக் கூடிய ஆற்றல் படைத்தவர் பாரதியார்.

ஆகவே, எந்தக் கவிஞன், நவரஸங்களை வெகு லாவகமாகக் கையாளுகின்றானோ, கையாள முடிகிறதோ, அவனே உலக மகாகவி என்ற பீடத்தில் அநாயாசமாக, எவருடைய உதவியுமின்றி எவருடைய சிபார்சையும் கோராமல் ஏறி உட்கார்ந்து கொள்ளுகிறான். "

(மகாகவி பாரதியார், பக்கம்111)

அவரது காலத்தில் சாதிப் பிரிவினை, பொறாமை காரணமாகப் பாரதியாருக்கு உரிய மதிப்பு ஏற்படவில்லை என்றும் வ.ரா. நினைக்கிறார். நூல் ஒரு வேண்டுகோளுடன் நிறைவு பெறுகிறது:

"தமிழ் இலக்கியத்தின் மூலமாகத்தான், தமிழர்களின் மனத்தைப் பண்படுத்த முடியும் என்பதைப் பாரதியார் வெக அழகாக எடுத்துக் காண்பித்திருக்கிறார். அதற்காகத்தான் 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்' என்று பாரதியார் தமிழர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறார். அதை தலைமேல் கொண்டு, உலகத்திலுள்ள எல்லா ரஸமான விஷயங்களையும் தமிழில் கொண்டு வந்து சேர்கக, நம்மில் ஒவ்வொருவரும் அரும்பாடு படவேண்டும்.பாரதியார் தான் தமிழ். பாரதியாருக்குப் பக்தி செலுத்துபவர்கள், தமிழுக்கும் தேசத்துக்கும் தொண்டு செய்யத்தான் வேண்டும். "

(மகாகவி பாரதியார் பக்கம் 118)

பாரதியார் மகாகவிதான் என்ற சர்ச்சையின் வரலாற்றை ஞானி அவர்கள் சென்ற ஆண்டு வெளியான தமிழில் படைப்பியக்கம் எனும் நூலில் ஒரு கட்டுரையாகத் தந்திருக்கிறார். 1937 இல் கண்ணன் என் கவி தோன்றியுங்கூட, பாரதியார் பற்றிய முழுமையான மதிப்பீடு இன்றுவரை யாரும் செய்யவில்லை என்று அங்கலாய்க்கிறார். இதற்காக, கு.ப. ராஜகோபாலனையும், பெ.கோ. சுந்தரராஜனையும்.. அவர்களது கருத்துக்களை.. மதிப்பீட்டுக்கு எடுத்துக்கொள்கிறார். இவ்விருவரும் தங்கள் மதிப்பீட்டிற்காக வடமொழி, ஆங்கிலமொழிப் புலவர்களை எடுத்தாள்கிறார்கள். ஆனால் அவர்கள் காலத்தைப்போல் தற்சமயம் உள்ள தமிழ் விமரிசகர்களுக்கு வடமொழி, ஆங்கிலமொழி இலக்கியத்துடன் தொடர்பு இல்லை. பாரதியாரிடம் வியாசர் போல் பெரிய வீச்சுக்கள் கிடையாது. அதற்காக அவரைச் சாதாரணமாக எடை போட்டுவிடமுடியாது.

மகாகவி என்றால் பெருங்கவிஞர் எனலாமா? முடியாது என்கிறார் ஞானி. ஆனால் மகாகவி என்பவனை ஞானி கூறும் major poet என்பதைவிட sublime poet என்று கூறலாம். Sublimity என்பதற்குப் பெரும் வீச்சுக்கள் (ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள், மில்டன் எழுதிய மாகாவியம்) அவசியமில்லை. கவிதையில் ஆழம் வேண்டும். "பெருங்கவிஞருக்குள்ளிருக்கின்ற ஆழ்ந்த வீச்சு " என்று ஞானி கூறுவது மிக்க நன்று, சாதாரண தேசிய கவி மகாகவி ஆகும் விந்தையை ஞானி, பாரதி காட்டும் பாரததேவி உருவகத்தில் காண்கிறார். தேசபக்தி தெய்வபக்தியாக, தெய்வீகமே தேசமாக ஒன்றும் காட்சி:

"தேசம், விடுதலை என்ற பாரதியின் கருத்துக்களின் வழியே பயணம் செய்யும்பொழுது நமக்குள் ஏற்படும் விரிவை, வேறு எவ்வாறு விளக்க முடியும்? கங்கையும், காவிரியும் நமக்குள் புரண்டோடுகின்றன. மாபெரும் வரலாற்றின் வசப்படுகிறோம். நாமே எல்லாமாகவும் இருக்கின்றோம். இந்தியா என்ற எல்லைக்குள்தான் நாம் இருக்கிறோமா? பிரபஞ்சத்தின் எல்லைகள் தகரும் பேரலைகள் எழுகின்றன. பாரதியின் கண்ணன் பாட்டு முதலியவற்றிற்குள்ளும் பயணம் செய்கிறோம். பாரதி கூறிய அமரத்துவம் நமக்கு வாய்க்கிறது. இப்பொழுது நாம் உறுதியாகச் சொல்லலாம் - பாரதி ஒரு மகாகவி. "

(தமிழில் படைப்பியக்கம், பக்கம் 57)

மேலும், பேராசிரியர் சிவத்தம்பி, அ. மார்க்ஸ் எழுதியுள்ள பாரதி : மறைவு முதல் மகாகவி வரை (1982) நூலை ஞானி அறிமுகப்படுத்துகிறார். பாரதியை மகாகவி எனலாமா எனும் கேள்வி சுழன்று கொண்டிருந்தபோது, மணிக்கொடி இயக்கமே பாரதியைத் தேசியக் கவியிலிருந்து இலக்கியச் செல்வமாக இனம் காண்பித்தது என இவ்விருவரும் கூறுகின்றனர். ஆனால், வ.ரா.வால் பாராட்டப்பட்ட பாரதியின் சமத்துவ உணர்வுக்கு மணிக்கொடி ஆசிரியர்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இதை எடுத்துச் சொன்னது ஜீவா. இந்த மார்க்ஸீய ஆய்வு மக்களிடையே மதிப்பைப் பெற்றது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கப்போனால் இந்தப் பல்வகை விமரிசனக் கோணங்களுக்கும் ஈடுகொடுத்து, இவை அனைத்தையும் தாண்டிய திரிவிக்கிரமனாக, தன்னிகரில்லா மகாகவியாகப் பாரதியார் ஞானிக்குப் புலப்படுகிறார்:

"வரலாற்றுள் தன்னைக் கரைத்துக்கொண்ட நிலையில் எல்லாவகை ஆக்கத்திறன்களும் அவருக்குள் பொங்கி வழிந்தன. வ.ரா. கூறியபடி அரக்கரால் பாயாகச் சுருட்டிக் கடலுக்குள் ஒளித்து வைக்கப்பட்ட உலகத்தை, திருமால் மீட்டெடுத்ததுபோல, பாரதி தமிழைமட்டுமா மீட்டெடுத்தார்? நவீன காலத்துக்கேற்ற வாழ்வை அவர் மீட்டெடுத்தார். பாரதி நமக்குத் தந்தது ஒரு புதிய சகாப்தம். தமிழ் இலக்கியத்திற்குள் ஒரு புதிய ஊழியை நமக்குரியதாகச் செய்ததன் மூலம் பாரதி நமக்கு மகாகவி".

(தமிழில் படைப்பியக்கம், பக்கம் 68)

1933 இல் முதன்முறை வெளியிடப்பட்டு 1942 இல் இரண்டாம் பதிப்பு கண்ட ஏ.வி. சுப்பிரமணிய அய்யரின் தற்காலத் தமிழ் இலக்கியம் எனும் நூலுக்கு முக்கியத்துவம் உண்டு. ஏனெனில் அந்த நாட்களிலேயே, தமிழ் இலக்கியத்தை வரலாற்றுப் பார்வையோடு கணித்து, பாரதியின் நூல்களை பொருளார்ந்த வழியில அய்யர் விமரிசித்துள்ளார். " இராமலிங்க சுவாமிக்குப் பின் தோன்றிய பெரிய இசைக்கவி பாரதியே" என்று துவங்கும் இயல் பாரதியை மகாகவி என்று வானளாவப் புகழ்வோர்கூட "பாரதியின் கவித்திறனின் அழகையும் புஷ்டியையும் தமிழ்அறிஞர்களும் தமிழ்மக்களும் அறிந்தபாடில்லை" என்று தளர்வுறுகிறது. திருவாசகம், திவ்யப்பிரபந்தம் போன்ற நூல்களில் காணும் இனிமை, பாரதியின் தேசிய கீதங்களில் உண்டு. பெரியாழ்வார் கண்ணன் பாட்டுக்கு முன்னோடி:

"ஆனால், பெரியாழ்வாரின் கவிதையின் அழகு, அவருடைய சமய வேட்கையிலிருந்தும் ஆழ்ந்த பக்தியிலிருந்தும் ஒளி பெற்றிருக்கிறது. பாரதியின் பக்திச்சுவை சமயத்தில் ஈடுபட்ட அநுபூதி முறையைச் சேர்ந்ததல்ல அவருடைய உணர்ச்சி, கவிதா சக்தியிலிருந்து கனிந்திருக்கிறது. கண்ணனைத் தந்தையாகவும், தாயாகவும், தோழனாகவும், சீடனாகவும், அரசனாகவும் சற்குருவாகவும் பாவித்துப் புனைந்திருக்கும் பாக்களில் கவிதையைவிடக் கருத்துப் பொலிவு அதிகமாயிருக்கிறது. அப்பரம் பொருளைக் குழந்தையாகவும், காதலனாகவும்,காதலியாகவும் பாவித்திருக்கும் பாக்களில் ஐந்தாறு பாரதியின் கவிதா சக்தியின் உச்சத்தைக் காட்டக் கூடியன."

(தற்காலத்தமிழ் இலக்கியம், பக்கம் 80)

பாரதியார் குயில்பாட்டை அகவற்பாவில் அமைத்திருக்கிறார். "பாட்டு முழுவதும் ஒரே இனிமையான வாக்கு ஒரே கவிதை வெள்ளம் ; வேகமும் நயமும் எந்த இடத்திலும் குறையவில்லை" பாஞ்சாலி சபதத்தை ஐயர் "பாரதியின் கவித்திறனின் தனி வெற்றி" என்கிறார். அவருக்கு இந்நூலில் குறையொன்றும் உண்டு. "திரௌபதி கிருஷ்ணபகவானைத் துதிசெய்யும் பாகம் நீளமாயிருப்பதால் சற்று விரஸமாகத்தான் இருக்கிறது." என்கிறார். இங்கு விரஸம் என்றால் காமச்சுவை என்பதல்ல. உணர்ச்சிகளின் மின்வெட்டை நீளமான துதி மந்தமாக்கி விடுகிறது என்பது அவர் கணிப்பு. மற்றப்படி, எளிய நடையில் ஆழமிக்க கவிதை எழுதிய பாரதியை எப்படிப் புகழ்வது? நொண்டிச் சிந்தைக் கூட தெய்வீகமாக்கிவிட்டாரே!

"கடந்த ஆயிரத்து இருநூறு வருஷங்களாக, சில சில்லறைப் பிரபந்தங்களைத் தவிர முக்கியமான நூல்கள் யாவும் விருத்தப் பாக்களிலேயே செய்யப்பட்டு புலவர்களும் அதன் பரப்புக்கும் சக்திக்கும் கரை கண்டுவிட்டார்கள். இனிமேல் கவிகள் புது யாப்புக் கருவிகளைத் தேடிக்கொள்ள வேண்டும்... மிக எளிய வார்த்தைகளைக்கையாண்டு, எல்லோரும் லேசாய்ச் சுவையுடன் வாசித்து அறியக்கூடும் முறையில், கற்பனை நிறைந்ததாயும், ஓசை இன்பம் மலிந்ததாயுமுள்ள கவிதையைச் சிருஷ்டிப்பதில் பாரதிக்கு நிகரானவர் தமிழ் இலக்கியத்திலேயே இல்லை என்று திட்டமாகச் சொல்லலாம். இந்த அம்சத்தில் கவி ஒரு புது சகாப்தத்தைத் தமிழ் இலக்கியத்தில் துவக்கியிருக்கிறார்."

(தற்காலத் தமிழ்இலக்கியம், பக்கம் 90 - 1)

மேலும், காவியத்தில் காணும் நாடகவீச்சை எள்ளு மூக்களவும் குறையாதபடிப் பாஞ்சாலி சபதத்தில் காணமுடிகிறது. ஐயர் அவர்கள் இதற்காகத் தேர்ந்தெடுத்த வரிகள்:

"மன மாரச் சொன்னாயோ? வீமா! என்ன
வார்த்தை சொன்னாய்? எங்கு சொன்னாய்? யாவர் முன்னே?
கனமாருந் துருபதனார் மகளைச் சூதுக்
களியிலே யிழந்திடுதல் குற்றமென்றாய்
சினமான தீ யறிவைப் புகைத்தலாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய்.

'தருமத்தின் வாழ்வுதனைச் சூதுகவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்' எனு மியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்
வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தான்.
கருமத்தை மேன்மேலுங் காண்போம். இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்.
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்.
தனுவுண்டு காண்டீவ மதன் பேர்."

அனேகமாக இருபதாம் நூற்றாண்டின் இடை வெட்டிற்குள் பாரதியாரது கவிதைகள், கட்டுரைகள், கதைகள், கடிதங்கள் முதலியன அச்சிடப்பட்டுவிட்டன. இந்தியா, சுதேசமித்திரன் போன்ற இதழ்களில் மறைந்திருந்த அரசியல், கலை, இலக்கியக் கட்டுரைகளையும் தேடி அச்சிடப் பாரதி அன்பர்கள் முழுமூச்சுடன் ஈடுபடலாயினர்.

பாரதியார் அச்சில் மாத்திரம் பவனி வரவில்லை. தமிழர் குரலிலும் ஒளிர்ந்தார். 1920-1947 பாரதம் மகாத்மா காந்தி தலைமையில் மும்முரமாகச் சுதந்திரப்போர் நடத்திய காலம். தமிழகத்தைப் பொறுத்தவரை தேசபக்திப் பிரச்சாரத்திற்குப் பாரதி பாடல்களே ஆதார சுருதியாக அமைந்தன:

"தேசபக்த சிங்கம் சுப்பிரமணிய சிவா திருநெல்வேலி சுதேசிக் கலகத்தின் போது சிறை புகுந்து வெளியே வந்ததும் தேசபக்த சமாஜம் என்ற தொண்டர் படையை ஆரம்பித்தார். இப்படையைச் சேர்ந்த இளைஞர்கள் தமிழ் நாடெங்கும் ஏழு மாதம் ஊர் ஊராய்ச் சென்று தமது தேசாவேசப் பேச்சுக்களுடன் பாரதி பாடல்களையும் பாடி வந்தனர். 'கல்கி' தி. சதாசிவம், மதுரை ரா. சிதம்பர பாரதி, ரா. ஸ்ரீநிவாஸ வரதன், தியாகராஜ சிவம், தூத்துக்குடி ந.சோமயாஜுலு, சென்னை எவெரெஸ்ட் ஹோட்டல் ஸ்தாபகர் சுந்தரம், திருமயம் கிருஷ்ணமூர்த்தி, மதுரை கிருஷ்ண குந்து முதலியோர் சிவாவின் சிஷ்யர்களாவர்."

(சித்திரபாரதி, பக்கம் 188)

சிவாவின் சிஷ்யர் ஸ்ரீநிவாஸ வரதன் 1933 இல் மதுரையில் பாரதி பஜனை சமாஜம் தோற்றுவித்துப் பாரதி புகழ் பரப்பினார். 'ஜயபேரிகை கொட்டடா' பாடலை அவர் மிகவும் உணர்ச்சிகரமாகப் பாடிவந்ததால் அவரைக் "கொட்டடா ஐயங்கார்" என்று அழைப்பார்களாம். 1965 இல் பாரதி சங்கம் எனக்குக் கேடயம் அளித்து கௌரவித்தபோது, அந்த சபையில் ஸ்ரீநிவாஸ வரதனின் மனைவியார் பத்மாசனி அம்மாள் ' மாயையைப் பழித்தல்' பாடலை மிருதுவாக, நெஞ்சுருகப் பாடியது அப்படியே என் நினைவில் தங்கியிருக்கிறது.

பாரதியின் தேசியப் பாடல்கள் மீது அரசாங்கம் விதித்த தடையை 1929 ஆம் ஆண்டு நீக்கியபோது பாரதி பிரசுராலயம்

"This copy was siezed by govt.
on 20th Sep. 1928. forfeiture order
cancelled and book returned 22.1.29"

என்று பிரதிகளில் ரப்பர் ஸ்டாம்ப் முத்திரையடித்து விற்றார்களாம். இது நல்ல விளம்பரமாக அமைந்தது என்று R.A.பத்மனாபன் குறிப்பிட்டிருக்கிறார். அரசின் தடையை மீறிப் பாரதியார் பாடல்களை எஸ். ஜி. கிட்டப்பா பாடி வந்தது, பாரதியாரது புகழைப் பட்டி தொட்டிக்கெல்லாம் எடுத்ததுச் சென்றது:

"உப்புச் சத்தியாக்கிரக இயக்கத்தின்போது பாரதியின் மந்திரக் கவிகள் தமிழ் நாட்டில் சாதித்த அற்புதம் சொல்லி மாளாது. சோர்ந்து கிடந்தமக்களைத் தட்டியெழுப்பி, அவர்கள் நரம்பில் முறுக்கேறச் செய்து, தேசத்திற்காக எண்ணற்ற பேர்கள் தங்களைத் தியாகம் செய்து கொள்ள தூண்டியதற்குப் பாரதி பாடல்கள் பொறுப்பாக இருந்தன.... கவிதை முலம் புதிய மானுட ஜாதியை உண்டாக்க முடியும் என்பதைத் தமிழகம் கண்ணெதிரே கண்டது."

(சித்திர பாரதி, பக்கம் 188)

1937 இல் பாரதி பிரசுராலயம் பிரசுரித்த இரண்டு ஆங்கில நூல்கள் மூலம் பாரதியார் மறைவாகத் தனக்குள்ளே பழங்கதைகள் சொல்பவரல்லர், அவர் சிறந்த விமரிசகர், மொழிபெயர்ப்பாளர், ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றவர் என்பதெல்லாம் தமிழரல்லாதார் தெரிந்துகொள்ள முடிந்தது. Agni and other Poems and Translations நூலை அறிமுகம் செய்வித்த ஸி. ஆர். ரெட்டி, கே.எஸ். வேங்கட்ரமணி இவ்வாறு கூறினர்:

"When a poetic soul like Bharati, happy beyond dream in his own mother tongue, turns to an alien language for the aching joy of self - expression, it is no surprise to find that the art becomes laden with a more serious thought. For the highest aim of self - expression even in art is after all self - realization. This intense longing for the Divine is visible in every song and every page of this collection". [6]

(Agni and other Poems and Translations, 1937 P. 6)

1948 ஆம் ஆண்டு எட்டயபுரத்தில் பாரதி மணிமண்டபம் தோன்றியது. இங்கு ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. இந்த காலகட்டத்தில் பாரதியின் உறவினர்கள் சிலர், பாரதியை அறிந்தவர்கள் பலர் (செல்லம்மாள், தங்கம்மாள், யதுகிரி அம்மாள், பரலி.சு. நெல்லையப்பர் போன்றோர்) தமது நினைவுகளுக்கு நூல் வடிவம் தந்தனர்.

பாரதி இலக்கியத்தில் 1949 ஆம் ஆண்டு வரலாற்றுச் சிறப்பு பெற்றது. இந்த ஆண்டில்தான் பாரதியாரின் மனைவிக்கு ரூ10,000, தங்கம்மாள், சகுந்தலாவுக்குத் தலா ரூ 5,000 கொடுத்து அரசாங்கம் பாரதி நூல்களின் உரிமைகளைப் பாரதி பிரசுராலயத்திடமிருந்து பெற்றது. பாரதி பாடல்களின் ஒலிபரப்பு உரிமையை வாங்கியிருந்த ஏ.வி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் அந்த உரிமையைப் பொதுமக்களுக்கு உரித்தாக்கினார். 1954 இல் சென்னை அரசாங்கம் ஒரு பாரதி பாடல் பதிப்பு வெளியிட்டது. பின்பு பாரதியாரின் பாடல்களைப் பொதுச்சொத்தாக்கிவிட்டது.

பாரதியைத் தமிழ் நாட்டிற்கு முழுமையாக அறிமுகம் செய்வதற்கு இவ்வாறு பல அன்பர்கள் பாடு பட்டுக்கொண்டிருக்கும் போதே, ஏன், அவர் வாழ்ந்தபோதே, தமிழரல்லாதவரும் பாரதியிடம் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதை இங்கு கூறவேண்டும். தெலுங்கிலும், பிரெஞ்சிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்ப்புக்கள் வெளியாயின. ஆந்திர ரத்ன துக்கிரால கோபாலகிருஷ்ணய்யாவுக்கு பாரதி பாடல்கள் மீது பிரேமை இருந்திருக்கிறது. Dr. ஜேம்ஸ் கஸின்ஸ் செய்துள்ள ஒரு மொழிபெயர்ப்பு.

"Far enisled in honeyed ocean,
Where the zephyr runs
Fleetly in delight of motion,
Live the shining ones,
Ah! come near us, comrades linking
Live with joy, life's nectar drinking,
Let perpetual gladness flourish:
All true joys our spirit nourish.
And for this, O Mother!
Grant us liberation".

'Liberation' என்று மகுடமிட்ட இப்பாடலில் மூன்று செய்யுட்கள் இவை. மேலே தந்துள்ள செய்யுளின் தமிழ் மூலம்:

"தூண்டு மின்ப வாடை வீசு
துய்ய தேன் கடல்
சூழநின்ற தீவிலங்கு
சோதி வானவர்
ஈண்டு நமது தோழராகி
எம்மொடமுதமுண்டு குலவ
நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளைய
நினைத்திரு மின்ப மனைத்தும் உதவ
வேண்டுமடி யெப்போதும் விடுதலை - அம்மா!"

பாரதியின் தமிழ் நூல்கள் மொழி பெயர்ப்புகளுக்கு இது ஒரு முன்னோடிதான். 1900 - 1950 ஆண்டுகளில் பாரதியின் நூல்கள் அச்சேறுதல், பாரதி விமர்சனம் என்று பாரதி யுகம் விரிந்து. 1951 - 2000 ஆண்டுகளில் பாரதி விமரிசனம், பாரதி நூல்கள் மொழிபெயர்ப்பு என மலர்ந்தது.

இருபதாம் நூற்றாண்டில் பாரதி

2. பிற்பகுதி : 1951 - 2000

சுப்பிரமணிய பாரதியார் மகாகவியா என்ற கேள்வியும், அதற்கான விடைகளும் அவசியமானவை அல்ல, பாரதியார் காலத்தை வென்ற கவி என்பது 1950 களிலேயே சப்தமில்லாமல் ஆங்கில மொழி பெயர்ப்புகள் மூலம் நிரூபணம் ஆக ஆரம்பித்துவிட்டது. 1950 இல் ஹேப்ஸிபா ஜேஸுதாஸன் மொழிபெயர்த்த The Song of the Cuckoo and other poems வெளிவந்தது. அடுத்த ஆண்டே கல்கத்தா பாரதி தமிழ் சங்கம் The Voice of a Poet தொகுப்பை வெளியிட்டது. தமிழகத்தை நீங்கி வேலைதேடி வெளியூர் சென்றவர்களுக்கு ஆனந்த விகடன், கல்கி, கலைமகள் மற்றும் பாரதியார் பாடல்கள் தான் தாய் மொழியுடன் நெருக்கத்தை வளர்த்து வந்தன. அவர்களது ஆர்வம், மகிழ்ச்சி, பெருமை காரணமாகத் தங்களது மொழியின் உயர்வுபற்றி வெளியூர் நண்பர்களுக்குச் சொல்ல ஆசைப்பட்டனர். ஆங்கிலம் இதற்கு உதவியாக இருந்தது.

The Voice of a Poet சிறு தொகுப்புதான் என்றாலும், பாரதியாரின் பன்முக ஆற்றலைச் சிறந்த எழுத்தாளர்கள் மூலம் எடுத்துக் கூறியது. மேற்கு வங்க கவர்னராகப் பதவி ஏற்ற ராஜாஜி பாரதியை வியாசருக்கும் வால்மீகிக்கும் ஒப்பிட்டுப் பேசினார். அவருக்குப்பின் வந்த கவர்னர் கைலாஸ்நாத் கட்ஜு பாரதி சங்கத்தை மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடுமாறு வேண்டினார். டெல்லி, பம்பாய், ஜம்ஷெட்பூர் முதலிய இடங்களில் செயற்பட்ட தமிழ்ச் சங்கங்கள் ஒருங்கிணைந்து இந்நூல் வெளியீட்டிற்கு ஆவன செய்தன. ராஜாஜி அவர்கள் முன்னுரை எழுதினார் :

"Bharati sang during the most ardent period of India's political growth when deliverance from foreign rule was far too far away even to be seen as a speck in the horizon. It was undoubtedly in the horizon when Gandhi came into the scene. Bharati ended when that happened. The body of national thought that he wove into song was that which preceded Gandhiji; it was Vivekananda's and Dadabhai Naoroji's and Tilak's India, and not that which most of the present - day admirers of India's struggle may have in mind, that form the material of Bharati's poetry", [7]

தமிழகத்தைப் பொறுத்தவரை இந்த விவேகானந்த - தாதாபாய் நவுரோஜி - திலக் போன்றோர் வளர்த்த உணர்ச்சிமிக்க பாடல்களே காந்தி யுகம் மலரக் காரணமாயிற்று. பாரதியின் தமிழ் பட்டினத்தார், தாயுமானவர் போன்றவர்களின் எளிமையான நடையை ஏற்றுக் கொண்டது என அ. ஸ்ரீனிவாசராகவன் தமது முன்னுரையில்.கூறுகிறார். அதே சமயம், அவர் வாழ்வாவது மாயம் என்று பாடவில்லை. மண்ணின் சுகதுக்கங்களைப் பாடலாகத் தந்து, மண்ணில் விண் சமைக்கலாம் என்றார் பாரதியார். இந்நூலில் உள்ள இருபத்தி இரண்டு பாடல்களில் அனேகம் ஸ்ரீனிவாசராகவனது மொழி பெயர்ப்பே. வேதரிஷிகளின் கவிதையில் தோய்ந்தவை. சிரஞ்சீவிக் காதல், விடுதலை, சமூக உணர்வு என பலவித கோணங்களில் எழுதப்பட்ட கவிதைகள். காந்தி வழியிலே நின்று, திருச்செங்கோட்டில் பிற்பட்டோருக்காக ஆசிரம வேள்வி நடத்திய ராஜாஜியின் ஆங்கிலம் பாரதியின் பாடலுக்குத் தெளிந்த கண்ணாடியாக அமைகிறது :

"Freedom, freedom, freedom!
To the Pariahs, to the Tiyas, to the Pulayas, freedom!
To the Paravas, to the Kuravas, to the Maravas, freedom!
come, let us labour all,
sparing naught and hurting none,
Walking in the way of Truth and Light.
There shall be none of low degree,
And none shall be oppressed.
Born in India, all are of noble birth".

சரோஜினி நாயுடு அவர்கள் பாரதி பாடலைக் கேட்டவர்கள். ஓரளவு ,தமிழைப் புரிந்து கொண்டு, ஆங்கில மொழிபெயர்ப்புக்களையும் ரசித்து, பாரதியாருக்குக் கவிக்குயில் இனிய அஞ்சலி செலுத்தியிருக்கிறார்:

"Poet Bharati has fulfilled the true mission of a poet. He has created Beauty not only through the medium of glowing and lovely words, but has kindled the souls of men and women by the million to a more passionate love of Freedom, and a richer dedication to the service of the country. Poets like Bharati cannot be counted as the treasure of any province. He is entitled, by his genius and his work, to rank among those who have transcended all limitation of race, language and continent and have become the universal possession of mankind". [8]

1954 இல் ப.மீ. சுந்தரத்தின் பாரதியார் வரலாறும் கவிதையும் எனும் நூல் கவிஞரின் வேதாந்தக் கருத்துக்களுக்குக் களம் கண்டது. கல்கத்தா தமிழன்பர்கள் ஆர்வம் காரணமாகத் தோன்றிய The Voice of a Poet மற்றும் பல முக்கியமான பாரதி பற்றிய நூல்கள் போல், ப.மீ. சுந்தரத்தின் ஆய்வு சிகந்தராபாத் தமிழ் அன்பர்களின் உற்சாகத்தால் உருப்பெற்றது. பேராசிரியரது நடை "பல்கலைக் கழக நடை" (academic - பண்டித நடை). பழந்தமிழ் இலக்கிய நயங்களை இடை இடையே விரவி வைத்த நடை. பாரதியார் தீவிரவாதிகளின் ஊர்வலமொன்றை நடத்திச் செல்வதைப் பேராசிரியரது வர்ணனையில் காண்போம் :

"படையை நடத்திச் செல்லுங்காலை, வாயில் வந்தே மாதர கீதமும், கையில் ஞான வாளும், நெஞ்சில் உரமும் கொண்டு சென்னை மறுகிற் சென்ற சிறப்பை நினைக்குங்கால் 'வாணன் பேரூர் மறுகிடை நடந்து நீணிலமளந்தோன் ஆடிய' குடக்கூத்தை நினைவுறுத்துகின்றது. மானம் சிறிதென்றெண்ணி வாழ்வைப் பெரிதென்றெண்ணும் மதியிலிகளுக்கல்லவோ தேசீயப் படையை நடத்த மனம் கூசும்! நண்ணார் நாண அண்ணாந்தேகும் தமிழ்ப் புலவர் பெரு மக்கள் பண்பாட்டினைப் பாடிக் களிக்கும் நம் பாரதியாருக்கா அத்தகைய இழிவு ஏற்படும்! அறம்அறத்தையே வளர்க்குமாகையால், பாரத சக்தியின் திருவருளால் பாரதியார் நடத்திச்சென்ற சுதந்திரப்படை அன்று யாதொரு ஊனமில்லாது விழாவைக் கடற்கரையிற் கொண்டாடி மகிழ்ந்து கலைந்தது".

(பாரதியார் வரலாறும் கவிதையும் பக்கம் 19)

வரலாற்றைக் கூறும் போதே இப்படி என்றால், பேராசிரியரது விமரிசன பாணி நம்மைப் பழந்தமிழ்க் கோட்டைக்குள்ளேயே இட்டுச் செல்கிறது. சங்கத் தமிழர் இயற்கை அனுபவத்தைப் பாரதியில் காண்கிறார். திருமந்திரம் கூறும் 'தன்னை அறியும் அறிவை அறிந்தபின் தன்னையே அர்ச்சிக்கத்தான் இருந்தானே' எனும் வாக்கைப் பாரதியாரின் சமயமாகக் காண்கிறார் தொல்காப்பியம் சிறப்பித்த பெண்மையைப் பாரதியாரும் எடுத்துக் கூறி வியப்பதைக் காண்கிறார். குறள் நம்முன் வைக்கும் சமுதாய நீதியைப் பாரதி பாடல்கள் சித்தரிப்பதைக் காண்கிறார். கம்பன் காட்டிய வழியில் தேசீய கீதங்கள் மிளிர்வதைக் காண்கிறார். தமிழர் பழம் பெருமையைப் பாரதியாரின் தேசபக்தியில் காண்கிறார். புறநானூறு சிந்தனைகளைப் பாரதியாரின் உயிர் நேயத்தில் காண்கிறார்.

பாரதியாரது தத்துவநிலை பற்றிப் பேராசிரியர் சுந்தரம் விரிவாக எழுதுகிறார். குயில் பாட்டு வெறும் கற்பனைச் சரக்காகத் தள்ள முடியவில்லை. ஏனெனில் பாடல் ஒரு கேள்வியாக முடிகிறது :

"ஆன்ற தமிழ்ப்புலவீர், கற்பனையே யானாலும்,
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே யிடமிருந்தாற் கூறீரோ?"

அதனால் பேராசிரியர் சுந்தரம் இப்பாடலை சைவசித்தாந்த கோட்பாடுகளை வைத்து விமரிசனம் செய்கிறார் :

"ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களில் காதலை மாயா சக்தியாகவும், ஆணவம், கன்மம் என்றவைகளை மாடனும் குரங்கனுமாகப் பாவித்து, குயிலைப் பசுவாக (ஆன்மாவாக)ப் பாவித்து, மன்னவன் மகனைப் பதியாகப் பாவித்துப் பொருள் கொள்ளுதலே பொருத்தமுடைத்தாம்.... காந்தியை அடைய விரும்பும் ஆன்மா காதலாகிய மாயையைக் கண்டு களித்துப் புகழ்ந்து பாடிக்கொண்டே இறைவனை அடைய முயலுங்காலை, ஆணவம், கன்மம் என்ற பேய்கள், மாயையைத் தனித்துவிடாது அதனுடன் கலந்து ஆன்மாவின் முற்போக்கைத் தடைப்படுத்துகின்றன. குயில் விடுதலை அடைய வேண்டுமெனில் மாடன் குரங்குகளை நீக்கிவிடவேண்டும். அத்தன்மையே போல் ஆன்மாவும் முக்திநிலை பெற விழைந்தால் பதியினிடத்தில் காதல் கொண்டு, ஆணவம் கன்மத்தினின்றும் அறவே நீங்கவேண்டும்."

(பாரதியார் வரலாறும் கவிதையும் பக்கம் 110 - 111)

இப்படித் தமிழில் ஓரளவு விரிவான நூல்களும், ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் சிலவும் வெளியானதில் பாரதியாரைப் பற்றி ஒரு முழுநீள சரித்திரம் ஆங்கிலத்தில் தேவை என்ற எண்ணம் வளரலாயிற்று. ஆங்கிலப் பேராசிரியரும், தமிழில் நல்ல பயிற்சி உடையவருமான பி. மகாதேவன் இத்தொண்டை ஏற்றார்.

Subramania Bharati : Patriot and Poet : A Memoir 1957 இல் வெளியாயிற்று. ஜஸ்டிஸ் பி. வி. ராஜமன்னார் தமது முன்னுரையில் பாரதி பற்றி ஆங்கிலத்தில் எழுதவேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். தமிழகத்திற்குள் பாரதியாரை முடக்கிவிடக் கூடாது!

"The supreme value of this book is that not only people in Tamil Nad, but people all over the world, who are interested in India, people who admire and respect fighters for freedom, wherever they be, people who are devoted to first - rate literature, in whatever language it may be, some of whom might have just heard of Bharati, would now know through this book all that is worth knowing of Bharati's life, character and creative work".

(Subramania Bharati, பக்கம்; III)

பேராசிரியர் மகாதேவனது ஆங்கில நடை கம்பீரமானது. தகவல்களைச் சேகரித்துச் செப்பமைக்கப்பட்ட பாரதியின் வரலாற்றில் ஸ்ரீ அரவிந்தருக்கும் ஒரு முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கீதை முன்னுரை, பதஞ்சலியின் யோக சூத்திரம் மொழிபெயர்ப்பு, மற்றும் சக்திப்பாடல்களில் ஸ்ரீ அரவிந்தரது ஆளுமை பளிச்சிடுவதாக மகாதேவன் கருதுகிறார். இந்நூலில்தான் வசன நடைநூல்கள் பற்றிய விமரிசனத்தை முதலில் காண்கிறோம்:

" A poet's handling of the prose medium - that other harmony - will carry tell - tale marks of fancy or imagination no less than of the anesting word or phrase. From short fabels, apologues, and allegories to short stories, Bharati tried his hand at a wide range of forms and has left something characteristic and original in each of them. The chief of his imaginative works in prose is Jananaratham - a sort of the Pilgrim's Progress, the Divine comedy, and the Revelations - all in one - in which Bharati moves with easy assurance from this world to the others both above and below it. The work has strong traces of the dream element which is so congenial to the poetic temperament". [10]

(Subramania Bharati, பக்கம் 170 - 1)

பத்திரிக்கை ஆசிரியராக இருந்தபோதிலும், பாரதியின் தெள்ளிய நோக்கு காரணமாக, தினசரிகளில் வெளியான கட்டுரைகள் கூடப் பொருட்செறிவுடன் விளங்குகின்றன. தராசு, ஞானரதம், பெண்விடுதலை பற்றி எழுதும் மகாதேவன் ஆங்கில இலக்கியத்தைப் பின்னணியாக உபயோகித்துப் பாரதியை விமரிசிக்கிறார். தராசு கட்டுரைகள் அடிஸனின் The Spectator Club ஐ நினைவுறுத்துகின்றன. பாரதியாரின் வசன கவிதைக்கு மூலம் ரவீந்திரநாத் தாகூர் என்கிறார். ஷெல்லியைப் போல் பாரதியும் ஒப்பற்ற ஆன்மீகக் காதல்

கவிஞன் (Poet of platonic love) என்கிறார். நிறைவாக, வடமொழி இலக்கியப் பரப்பை ஓரளவு அளந்தவர்களால்தான் பாரதியை நன்கு கணிக்க முடியும் என்கிறார். ஆனால், கடந்த அரை நூற்றாண்டில் வடமொழி வளம் தமிழகத்தில் வெகுவாகக் குன்றிவிட்டதுதான். பேராசிரியர் மகாதேவனது கூற்றை இந்த சந்தர்ப்பத்தில் சற்று சிந்திப்போம் :

" Above all sanskrit found in the south a hospitable home in the days of its northern eclipse. The most memorable developements in Hindu art and thought in the post - Vedic and post - classic periods have resulted from the labours of Dravidian geniuses adopted into the Sanskrit fold or so called Aryans who had acclimitized themselves in the Tamil ethos if to the manner born. It would profit neither Thamizhagam nor Bharat Varsha if this immemorial association should be snapped by ignorance, neglect, petuance or fanaticism".[11]

(Subramania Bharati, பக்கம் 184)

பேராசிரியர் மகாதேவன் நல்ல மொழிபெயர்ப்பாளரும் கூட. "யாமறிந்த மொழிகளிலே" எனும் செய்யுளுக்கு ஒருகுறிப்பும் தருகிறார். பர்க், வர்ட்ஸ்வொர்த் போன்ற ஆங்கிலக் கவிஞர்கள் தமது மொழியை எவ்வளவு நேசித்தார்கள்! அதேபோல் பாரதியின் தாய் மொழி பக்தி, தமிழில் செவ்வியல் நூல்களைத் தந்த புலவர்களைப் போற்றுகிறது:

" Of all the tongues that I have sampled,
For sweetness Tamil's unexampled:
But now become illit'rate mutes
Our lives are worse than those of brutes;
Grown recrean't t 'our ancient trust
Our treasures in a heap have gone to rust.
Tamil's mellifluous sounds
Must reach the world's utmost bounds,
If we'are to lift our heads again,
Instead of wasting our time in vain"

பாரதியாரைப் பற்றிய ஆங்கில நூல்கள் வளர்வதற்கான இச்சூழ்நிலையில் தான் நான் பாரதி இலக்கியத்திற்கு வந்தேன். 1957 இல் ஒரு சில பாடல்களை நான் மொழிபெயர்த்தேன். இம் மொழிபெயர்ப்புகள் இண்டியன் எக்ஸ்பிரஸ், திரிவேணி, பிரபுத்த பாரதா முதலிய இதழ்களில் வெளி வந்தன. திரிவேணியில் 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' பாடலுக்கான மொழி பெயர்ப்பு வெளியான போது அதை இராஜாஜிக்கு அனுப்பினேன். அவர் என்னைப் பாராட்டியதோடு . 'பாரதம்' என்பதை இந்தியா என்று மொழி பெயர்த்தது தவறு, இப்பாடலில் "பாரதம்" குருக்ஷேத்திரப் போரைக் குறிக்கிறது என்றும் எழுதினார். எனக்கு உற்சாகமாக இருந்தது. என் தந்தையார் காட்டிய வழியில் அன்றிலிருந்து ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளையும் என் இரு கண்களாகப் போற்றி, அம்மொழிகளில் உள்ள செவ்விலக்கியங்களைப் படித்து வருகிறேன். மனம் தூண்டும்போது மொழி பெயர்ப்புக்களும் செய்து வருகிறேன்.

பாரதியாரைப் பற்றி நான் முதலில் வெளியிட்ட நூல் Bharati in English Verse (1958). வெளியீட்டாளர், என் சகோதரன் அம்பிராஜன். நாங்கள் இருவரும் அப்போது ஆந்திரப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவர்களாக இருந்தோம். என்னுடைய நூலை அம்பிராஜன் மூலம் பெற்ற ஆக்கூர் அனந்தாச்சாரி, அவருக்கேற்பட்ட மகிழ்ச்சியில் ஒரு மாபெரும் வெளியீட்டு விழாவை ராஜாஜி ஹாலில் ஏப்ரல் 12ஆம் தேதி நடத்தினார்.

எனக்கு இன்று ஒரு இனிய கனவாகத் தோன்றும் அக்காட்சி, அந்தக் காலத்தில் பிரமிப்பாக இருந்தது. நான் அனேகமாக ஆந்திர நாட்டிலேயே வளர்ந்தவள். விசாகப்பட்டினத்தில் பல்கலைக் கழகமும் துறைமுகமும்தான் உண்டு. பெரிய நூல் வெளியீட்டு விழாக்கள் கண்டதில்லை. தினமணி, நவ இந்தியா, ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் முதலிய தினசரிகளின் நிருபர்கள் வந்திருந்தனர். ஹால் நிரம்பி இருந்தது. அப்படி பாரதியிடம் சென்னை வாழ் மக்களுக்குப் பக்தி. சி. சுப்பிரமணியம் தமது தலைமை உரையில் கூறினார் :

"பாரதியின் சிருஷ்டிகளைத் தமிழ் மக்கள் மட்டும் படித்து அனுபவித்தால் போதாது. எல்லா மக்களும் படித்து இன்பமுறவேண்டும். திருக்குறள் போல உலக நூலாக எல்லா மொழிகளிலும் பாரதியின் இலக்கியப் படைப்புக்கள் இடம் பெற வேண்டும்."(தினமணி, 14, ஏப்ரல், 1958)

அசெம்பிளி சபாநாயகர் யு. கிருஷ்ணாராவ் நூலை வெளியிட்டுப் பேசுகையில் "மற்ற பாஷைகளை, ஒரு நூலை மொழி பெயர்க்கும்போது, சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பு நேராக இருக்கவேண்டுமென்பதில்லை என்றும், மூல ஆசிரியரின் உணர்ச்சி, மொழி பெயர்ப்பில் பிரதிபலிப்பதே முக்கியம் என்றும் வலியுறுத்தினார்." ஏ. ஜி. வெங்கடாச்சாரி, கே.எஸ். இராமஸ்வாமி சாஸ்திரி, பெ.நா. அப்புஸ்வாமி முதலியோர் என் துணிச்சலைப்பாராட்டி ஆசி கூறினார்கள். நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை கூறினார்:

"பாரதியின் பாடல்களைத் துண்டாடிப் பார்க்காமல் ஒன்றாகக் கூட்டிச் சேர்த்துப் புரிந்து கொள்ள வேண்டும். அவரது வார்த்தைகளைப் பிரித்துக்கொட்டிச் சிலர் வேறு அர்த்தம் செய்கிறார்கள். இது வருந்தத்தக்கது. தேசீய உணர்ச்சியுடன், அவர் பாடிய தேசீயப்பாட்டுக்கள் தனி நாட்டுப் பாடல்கள் மட்டுமல்ல; மெய்ஞானத்திற்கான பாடல்கள். சக்தியையும் சாந்தத்தையும் அவரது கவிதைகளில் காணலாம். சுதந்திரம் கிடைக்கச் சண்டை போடவேண்டுமென்று பாரதியார் தமது கவிதைகளில் ஒரு இடத்திலும் சொல்லவில்லை. நல்ல உயர்ந்த கவி உலகம் உய்ய வேண்டுமென்றுதான் பாடுவார். இந்த வரிசையில் சேர்ந்தவர் பாரதியார்".(தினமணி ஏப்ரல் 14, 1958)

தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் மாலையும் கழுத்துமாக நின்று அலைமோதும் வெள்ளமென கர்ஜிக்கவே செய்தார் எனலாம் :

"உலக அரங்கில் இந்தியக் கவிஞர்களைப்பற்றி – குறிப்பாக பாரதியின் பாடல்களைப் பற்றி எடுத்துக் கூற மொழி பெயர்ப்புகள் இன்றியமையாதவை. உருவத்தை மறு மொழியில் மாற்றுவதில் சிரமம் அதிகம் உண்டு. ஆங்கில அறிஞர்களிடம் இம்மொழி பெயர்ப்பைக் காட்டி அவர்களது பாராட்டுகளையும் பெறலாம்". (தினமணி ஏப்ரல் 14, 1958)

ஆக, தலை கிறுகிறுக்கும் வண்ணம் Bharati in English Verse அரங்கேறியது. நானும் என் சகோதரனும் நீளமான பட்டியல் தயாரித்துப் பல பெரிய மனிதர்களுக்கு அனுப்பினோம். ஒருவர் விடாமல் ஊக்கமளிக்கும் வகையில் பதில் போட்டனர். இராஜாஜி அவர்கள் என் தந்தையாருக்கு இரு கடிதங்கள் எழுதினார்!.

Dear Sir, 20.04.58.

I have been browsing on your daughter's book all these days and I think I am now in a position to say it is a very good production. It is the first good thing done for Bharati by way of raising the iron curtain of Tamil for outsiders. The translation as all good translations must be is draped, as my friend (Sri Navaratna Rama Rao) described,in diaphanous drapery and there are not in it any of the blemishes so commonly found in Indian attempts at English verse. I sincerely congratulate Prema.

You should send if you haven't aheady done it two copies to Sri Humayun Kabir. I feel the work ought to receive some recognition in the Sahitya Akademi.

Yours sincerely,

C. Rajagopalachari". [12]

ரா. நா. தினமணியில், R.A. பத்மனாபன் ஹிந்துவில், நவரத்ன ராமராவ் ஸ்வராஜ்யாவில், கே. சுவாமிநாதன் இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸில் என்று ஏகமாக நல்ல விமரிசனங்கள் வந்தன. நானும் என் சகோதரனும் ஒரே பெருமிதத்தில் ஆழ்ந்தோம். ஆனால் Thought பத்திரிகையில் வி. எஸ். மணியம் என்பவர் பாரதியின் எழுச்சி மிக்க பாடலைச் சப்பென்று மொழிபெயர்த்திருப்பதாக விமரிசித்தார். என் சகோதரனுக்குப் பொறுக்கவில்லை "உமக்கு விமரிசனம் செய்ய என்ன தகுதி" என்று கடிதம் எழுதினான். இளமை வேகங்கள், ஆர்வங்கள், சிலிர்ப்புகள் !!! எது எப்படியோ, ஓராண்டு காலம் ஒரே உற்சாக வெள்ளம் தான்.

ஆனால் நூலை வாங்குவார் இல்லை. இது எங்களுக்கு மிக ஏமாற்றமே. இரண்டே ரூபாய் என்றாலும் தமிழகத்திலும், வெளியூர்களிலும் விற்பனை இல்லை. என் உற்சாகம் மறைந்தது. நான் ஸ்ரீ அரவிந்தரைப் பற்றி எழுதிக் கொண்டிருந்த ஆய்வு நூலில் ஆழ்ந்தேன். என் வாழ்க்கைப்பாதை ஸ்ரீ அரவிந்த தரிசனத்துடன் முழுமையாக இணைந்து போனது.

ஆனால் ஸ்ரீ அரவிந்தரைப் படித்து வரும் போது சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றிப் படிப்பது, அவரது கவிதை, கட்டுரைகளில் மகிழ்ச்சி பெறுவது, அவரது கவிதைகளை மொழிபெயர்ப்பது போன்றவை எனக்கு இனிமையான, பொருள் நிறைந்த பொழுதுபோக்காக இருந்தன. எப்போதேனும் பாரதியார் பற்றிக் கட்டுரைகள் எழுதுவதுண்டு. இந்த நிலையில் மைசூரிலிருந்து ராவ் ஆண்ட் ராகவன் பதிப்பகத்தார் கேட்டுக்கொண்டபடி Subramania Bharati என்ற நூல் எழுதிக் கொடுத்தேன். இந்நூலுக்கும் நல்ல வரவேற்பு. 1968 இல் நேஷனல் புக் டிரஸ்ட்க்காக ஒரு நூல் எழுதினேன். இது பல இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

சாகித்யா அக்காதெமியும் யுனெஸ்கோ நிறுவனமும் கேட்டுக் கொண்டபடி Poems of Subramania Bharati எனும் நூலைத் தயாரித்தேன். இதற்காக யுனெஸ்கோவின் பதிப்பாசிரியர் மில்டன் ரோஸந்தாலுடன் 1976 இல் கடிதப் போக்குவரத்து எனக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. தமிழே தெரியாத மேலை நாட்டவருக்கு எப்படி மொழி பெயர்ப்பை வழங்கினால் அவர்களது ஆர்வத்தைத் தூண்டலாம் என்பதைத் திரு ரோஸந்தால் எனக்குக் கற்பித்தார் 'ஜய பாரத' போன்ற பாடலை இன்றைய தலைமுறை ரசிக்குமா என்பது கேள்விக்குறி என்றார். (தேசிய கீதங்களில்தான் எனக்கு முக்கியமான மொழிபெயர்ப்புச்சிக்கல் ஏற்பட்டது) 3, மார்ச், 1976 அன்று அவர் எழுதினார்:

"As for as the west is concerned, 'exultant chants' and 'cries to victory' died with Hitler and Mussolini. These approaches to action could perhaps be communicated to a public which has never known T.V. In America and Europe, television has shown the young, every night for nine long years, that there is no power, no glory and no victory in war, but only blood and guts and massacred children and elders. Believe me Jaya Bharata belongs in the 19th century. In our days there is nothing to exult over". [13]

பாரதியின் தேசீய கீதங்களுக்கு நூலில் முக்கியமான இடம் வேண்டும் என்று நான் பதில் எழுதினேன்.

"It may surprise you, but even today people are deeply stired when these poems are sung, especially by some powerful stage personalities. One reason may be that the mass of people feels that this ideal has become a 'lost paradise' -- realisable but for human faults discernible in India's post - independence patriot - politicians". (letter dated 30.04.1976)[14]

இந்நூல் 1977 இல் வெளியாயிற்று. பாராட்டுதல்களைப் பெற்றது. யுனெஸ்கோவின் "UNESCO Collection of Representative works: Indian series" என்ற வரிசையில் அமைந்த நூல் என்ற பெருமையும் இதற்கு உண்டு. சாகித்ய அக்காதெமியின் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசைக்கும் பாரதி என்ற நூல் எழுதினேன். பிரபல எழுத்தாளர் கே. எஸ். ஸ்ரீனிவாஸன் இந் நூல்களை வரவேற்று நிறை, குறை இரண்டையும் அழகாக எடுத்துக்கூறி கட்டுரை எழுதியது எனக்கு மன நிறைவு தந்தது. மேலும் 1982 இல் பாரதியாரது நூற்றாண்டைக் கொண்டாடியபோது தேசீயக் கருத்தரங்குகள், அகில உலகக் கருத்தரங்கு (சாகித்ய அகாதெமி நடத்தியது), கூட்டங்கள் நடந்தன. அவற்றில் எனது ஆங்கில நூல்கள் வரவேற்கப்பட்டன, தமிழ் மொழி தெரியாத பிறநாட்டு அறிஞர்கள் எனது மொழிபெயர்ப்புக்களை தங்களது கட்டுரைகளுக்கும் சொற்பொழிவுகளுக்கும் உபயோகித்தனர் என்பதெல்லாம் அறிந்து என் மனம் மகிழ்ச்சியுற்றது. ராஜாஜி முதலியோர் 1958 இல் கூறிய ஆசியும், என் தந்தையார் கே. ஆர். ஸ்ரீ நிவாஸ அய்யங்கார் அளித்த ஊக்கமும் எனக்கு வந்த நற்பெயருக்குக் காரணம் என்பதை அன்றும் இன்றும் பணிவுடன் உணர்ந்திருக்கிறேன்.

பாரதி பற்றி நூல்கள் எழுதுவதில் ஈடுபட்ட எனக்கு மலாயா பல்கலைக்கழகத்தில் நடந்த அகில உலகத் தமிழ் கருத்தரங்கிற்கு அழைப்பு வந்தது. கருத்தரங்கின் செயலாளர் தனிநாயக அடிகள் கேட்டுக்கொண்டபடி 17-23 ஏப்ரல், 1966 நடந்த கருத்தரங்கில் "The Emotive Aspects of Bharati's Poetry' எனும் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தேன். கட்டுரை ஆங்கிலத்தில் இருந்தாலும் ஒரு தமிழாக்கமும் இணைத்திருந்தேன்.

"சகல ஜீவ ராசிகளிடமும் அன்புமயமாக இருக்கவேண்டும் என்று பாரதியார் பல பாடல்களில் கூறியிருக்கிறார். ஜீவராசிகளைக் காணும்போது தோன்றும் மானிட அன்பைப் போன்று, தெய்வீக அன்பைத் தேடி குயில்பாட்டை அமைத்தார். மனத்தில் இருக்கும் மாசுகளை அகற்றிவிட்டால், அன்பு நம்முள்ளத்தே இருப்பதைக் காணலாம், இது உறுதி என்பதைக் குயில்பாட்டு தெய்வீகக் கவிதை மூலம் விளக்குகிறது".

ஆங்கில ஏடுகளில் நான் எழுதிவந்த கட்டுரைகள், விமரிசனங்கள், எனது சொற்பொழிவுகள் மூலமாக என் பெயர் பாரதி இலக்கியத்துடன் இணைக்கப்பட்டிருந்ததால், அமெரிக்காவிலிருந்து வெளியாகும் Books abroad (தற்போது World Literature Today என்று வெளியாகிறது) எனக்கு ஒரு நூலை விமரிசனத்திற்கு அனுப்பியது. பிரபல Twayne Publishers வெளியிட்ட நூல் கே. கே. ராய் என்பவர் எழுதிய சுப்பிரமணிய பாரதி, இதே நூலை பம்பாயிலிருந்து வெளியாகும் The Aryan Path இதழும் எனக்கு அனுப்பியது. நல்ல அச்சு, பைண்டு, அமெரிக்காவில் கொடி கட்டிப் பறக்கும் வெளியீட்டாளர்கள். இனி என்ன வேண்டும்!

ஆர்வமுடன் படிக்க ஆரம்பித்தேன். எனக்கு வியர்த்து விட்டது. இப்படியொரு பகல் கொள்ளையா? இப்படியுமொரு இலக்கியத் திருட்டா! இந்நூல் இலக்கியத் திருட்டால் ஜோடிக்கப்பட்டது. விமரிசனத்தை வெளியிட விரும்புகிறீர்களா என்று Books Abroad இடம் கேட்டபோது, விமரிசனத்தை அனுப்புமாறு பதில் வந்தது. என் விமரிசனத்தை அச்சிட்டனர்.

என் கண்டுபிடிப்புகளின் சுருக்கம். நூலின் பாதிக்குமேல் எனது Bharati in English Verse (Porunai), Subramania Bharati (Rao & Raghavan) மற்றும் Subramania Bharati (National Book Trust) நூல்களிலிருந்து எடுத்து அச்சிடப்பட்டிருக்கிறது; கல்கத்தா தமிழ்ச் சங்கத்தினரின் Essays on Bharati (1970) யிலிருந்து C.S. கமலபதியின் முழுக் கட்டுரை ஒன்று, ஹெல்கா ஆன்டன், தெ. பொ. மீனாட்சிசுந்தரம், மு. வரதராசன், கி. சந்திரசேகரன், ஹா.கி. வாலம், ஆர். எஸ். தேசிகன், அ.மு.பரமசிவானந்தம், கே. ஆர். ஸ்ரீ நிவாஸ அய்யங்கார் முதலியவர்களின் கட்டுரைகளிலிருந்து பாராக்கள் அனைத்துமே ராயின் பெயரில் அச்சாகியிருந்தன. என் விமரிசனத்தை இவ்வாறு நான் முடித்தேன்: "A plagiaristic exercise so palpable, so gross, and such irresponsible fabrication of 'references' can only add up to an outrage without parallel."

முழுநூலையும் அலசி மூலம் - திருட்டு என்று பட்டியலிட்டு என் சகோதரன் (பேராசிரியர், நியூ ஸவுத்வேல்ஸ் பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியா), என் தந்தையார் (துணைத் தலைவர், சாகித்திய அக்காதெமி) சாமுவேல் இஸ்ரேல் (சேர்மன், நேஷனல் புக் டிரஸ்ட்) மூவருக்கும் அனுப்பினேன். மூவரும் Twayne Publishers க்கு கடிதம் எழுதினார்கள். நானும் எழுதினேன்.

Twayne Publishers உடனே ஒரு குழு அமைத்து, எனது கண்டுபிடிப்புகளை ஒப்பு நோக்கி, மிகவும் கேவலமான இலக்கியத்திருட்டு நடந்திருப்பது கண்டு அதிர்ந்து போனார்கள். தங்களது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கடிதம் எழுதினார்கள். "வளர்ந்து வரும் நாடுகளை ஏமாற்றி வரும்படி சேர்க்கும் வித்தையா" என்று என் சகோதரன் காரசாரமாகக் கேட்டதற்கு அப்படி எல்லாம் இல்லை, இது எங்களை மீறி நடந்த அவலம் என்று சமாதானம் கூறினார்கள். மேற்படி நூலை வாங்கியவர்கள் அதைத் திருப்பிக் கொடுத்து முழு விலையும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பிரேமா நந்தகுமார் அவர்களுக்கு இப்படியொரு இலக்கியத்திருட்டால் மன வருத்தம் ஏற்படுத்தியதற்கு வருத்தம்தெரிவிப்பதாகவும் விளம்பரம் செய்தார்கள். பாக்கியிருந்த படிகள் அனைத்தையும் அழித்துவிட்டனர். விளம்பரத்தில் "We apologise to Dr. Nandakumar and her colleagues in India for Dr. Roy's plagiarisms from their fine works and ask their forgiveness for the inexperience that made the publication of this plagiarism possible".

கே.கே. ராயின் நூலை வெளியிட்டதனால் தங்களுக்கு முழு நஷ்டம் என்றும், மேலும் அடுத்து வெளியாக இருக்கும் 200 நூல்களின் பட்டியலைப் பரிசீலிப்பதாகவும், இந்த அவமானத்தால் அவர்களது வெளியீட்டு அட்டவணை இரண்டு ஆண்டுகள் பின்தள்ளிப் போவதாகவும் எழுதினார்கள்.

மேலும், தாங்கள் ராயிக்குக் கொடுத்திருந்த 188 டாலர் பற்றிக் கூறி, அவனது விலாசத்தைக் கொடுத்து நான் இந்தியாவில் வழக்குத்தொடுத்தால் documentary evidence தருவதாகவும்கூறினார்கள். என் தந்தையார் வழக்குத் தொடுக்க வேண்டாம் என்று அறிவுரை கூறினார். ஸாமுவேல் இஸ்ரேல், எம். ரோஸந்தால் முதலியோரும் இதையே கூறினார்கள். Twayne வருத்தம் தெரிவித்து, விளம்பரம் செய்து, படிகளை அழித்துவிட்டது போதும் என்றுவிட்டார்கள். நானும் என் மன உளைச்சலைக் கட்டித் தூர வைத்துவிட்டேன்.

காரணம், அப்பொழுது நான் மூன்று சிறு குழந்தைகளுக்குத் தாய். என் கணவருக்குச் சொற்ப சம்பளம். நாங்கள் ராஞ்சியில் இருந்தோம். கேசுக்காகச் சென்னை, கல்கத்தா என்று அலைய முடியாது. அப்பா அவர்கள் தீர்க்க தரிசனத்துடன் கூறிய அறிவுரைதான். இந்த சம்பவம் இன்று என் நீண்ட வாழ்க்கைப் பயணத்தில் ஏற்பட்ட பல நிகழ்வுகளுடன் ஒன்றாகத் தேங்கிக்கிடக்கிறது. ஆனால்கே. கைலாசபதி போன்றோர் கே. கே. ராயைப் பெரிய பாரதி அறிஞர் என்று எடுத்துக்காட்டாக ஆண்டிருப்பதைப் படிக்கும் போது (எடுத்துக்காட்டு : On Bharathi, New Century Book House, 1987) மனதுக்கு வேதனையாகவும் இருக்கிறது.

வேடிக்கை என்னவென்றால் பாரதியார் மூலம் நற்பெயர் கிடைத்த எனக்குப் பலமுறை மன உளைச்சலும் பரிசாக வந்திருக்கிறது. என் மொழி பெயர்ப்புக்களைத் தங்களுடையதுபோல் போட்டுக்கொண்டு விடுகிறார்கள். எத்தனை பேரிடம் சண்டை போடுவது? அரசாங்கமே இப்படிச்செய்தால் என்ன செய்வது?

தந்தி, தபால் இலாகா 1960 இல் பாரதியார் உருவம் பொறித்த 15 நயாபைசா ஸ்டாம்பு வெளியிட்டது. வெளியீட்டு விழாவிற்காக அழகிய சிறிய நூல் வெளியிட்டது. முன்னுரையில் அனேகமாக எனது நூல்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டதுமன்றி, நான்கு பாரதி பாடல்களை அச்சிட்டு அவற்றுக்கு என்னுடைய மொழிபெயர்ப்புக்களை இணைத்திருந்தார்கள். ஆனால் என் பெயர் எங்குமே இல்லை!

"காக்கை, குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்;
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை;
நோக்க நோக்கக் களியாட்டம் - ஜயபேரிகை"

"The crow and the sparrow are of us,
The sea and the mountain are of us;
'Tis ourselves everywhere we see,
And the heart dances with delight.
Beat the Drum"

அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி, அவர்கள் வருத்தம் தெரிவித்ததோடு சரி. போன ஆண்டு கூட ஹிந்துவில் விஜயா ராமசாமி என் மொழி பெயர்ப்புக்களை தன்னுடையது போல் வெளியிட, ஹிந்து ஆசிரியருக்கு நான் எழுத, மீண்டுமொரு வருத்தம் தெரிவித்தல், apology.

இது காரணமாக உண்மையாகவே பாரதியின் நூல்கள் என் வாழ்க்கை அனுபவங்களுடன் இரண்டறக் கலந்துவிட்டன. மேலும் நான் வருந்துவானேன்? பாவம், பாரதியாரின் தம்பியாரே இலக்கியத் திருடரிடம் மாட்டிக் கொண்டிருக்கிறார்! 1983 இல் நெருப்புத்தேர் (Chariot of Fire) என்று கம்பீரமான தலைப்பில் கே. எஸ். நாகராஜனது நூலை மாக்மில்லன் கம்பெனி வெளியிட்டது. பாரதியாரின் ஆங்கிலக் கவிதைகள் கட்டுரைகளை நாகராஜனது குறிப்புககளுடன் தருவது. ஆனால் குறிப்புகள் C. விசுவநாத அய்யர் எழுதியவை. மேலும், நூலின் முன்னுரை நாகராஜன் தேடிப் பிடித்து இந்த

ஆங்கிலப் படைப்புக்களை முதன் முறை வெளியிட்டதுபோல் பிரமை ஏற்படுத்துகிறது. 1937 இலேயே இந்நூலில் உள்ளவை Agni and other Poems and Translations/ Essays And other prose Fraguents என வெளியாகிவிட்டன என்று குறிப்பிடவில்லை. 1980 இல் C. விஸ்வநாத அய்யர் இரண்டாவது பதிப்பு அச்சிட்டிருப்பதும் கூறவில்லை. ஏன், அய்யர் பெயரே நாகராஜனின் நூலில் இல்லை! இதைச் சுட்டிக் காட்டி ஹிந்துவில் நான் விமரிசனம் எழுதினேன். ஆனால் மாக்மில்லன் கம்பெனி ஏதும் செய்ததாகத் தெரியவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இப்படித்திருட்டுகள் நடந்து வந்தாலும், சிறந்த ஆய்வு நூல்களும் தோன்றின. போகிற போக்கில் ஒருசில ஆசிரியர்களைப் பார்ப்போம். ம.பொ. சிவஞானம் அவர்கள் பாரதியும் ஆங்கிலமும், பாரதி கண்ட ஒருமைப்பாடு, வள்ளலாரும் பாரதியும், உலகமகாகவி பாரதி எனப்பல சிறந்த நூல்கள் எழுதியிருக்கிறார். சிலம்புச் செல்வர் 1980 - 82 இல் மயிலை இலக்கிய வட்டம் - பாரதிய வித்யாபவன் ஆதரவில் 19 சிறப்பான சொற்பொழிவுகள் ஆற்றினார். இவை பாரதியார் பற்றி ம.பொ.சி பேருரை (1983) என்று வெளியானது. பாரதியாரின் அனைத்துப் படைப்புகளையும் ஒருங்கிணைத்த நோக்கில் காண்பது. பாரதி முதல் தேசிய கவிஞர், ஆனால் அவரது பாடல்களில் ஒன்றை ஏற்காமல் விடுதலை பெற்ற இந்தியா தாகூரின் வங்கமொழிப் பாடலை "இடித்தும் புடைத்தும்" தேசிய கீதமாக ஏற்றுக் கொண்டது நினைத்துப் பொறுமுகிறார்.

உலகத்தில் எங்கெங்கு விடுதலைக்குரல் ஒலித்ததோ, அவ்வொலிகளைப் பாரதியார் கேட்டுத் தமிழில் வடித்தார் (பெல்ஜியத்திற்கு வாழ்த்து); பெண் விடுதலைக்காக உழைத்தார், தமிழர் முன்னேற வழிகாட்டினார் என்றெல்லாம் நூல் கூறுகிறது. பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தை நுணுக்கமாக ஆராய்கிறது. பாஞ்சாலி சபதம் ஒரு வழி நூல். வியாசரது பாஞ்சாலி சபதம் ஏதும் செய்யவில்லை. ஆனால் வில்லிப்புத்தூராரின் பாஞ்சாலி சபதம் செய்கிறாள்:

அரசவையில் எனையேற்றி, அஞ்சாமல்
துகில் தீண்டி, அளகம் தீண்டி,
விரைசெயனி இனம்படி தார் வேந்தரெதிர்
தகாதனவே விளம்புவோரைப்
பொருசமரில் முடிதுணித்துப் புலால் நூறு
வெங்குருதி பொழிய, வெற்றி
முரசறையும் பொழுதல்லால் விரித்த
குழல் இனியெடுத்து முடியேன்..."

பாரதியின் பாஞ்சாலி இன்னுமொருபடி மேலே சென்று துச்சாதனன், துரியோதனனைப் பெயர் குறித்து அவர்களது அழிவுக்கான சூளுரைக்கிறாள். சாத்திரம் என்ற பெயரில் சூதாட்ட அழைப்பை ஏற்பது, பெண்ணடிமை செய்வோரை அவர்கள் வழியில் போகவிடுவது போன்றவற்றைப் பாரதியார் வெறுத்தார். பாஞ்சாலியைப் பாரத மாதாவாகக் கண்டார். பாஞ்சாலியைச் சுற்றியிருந்தவர்களைப் பயந்தாங்கொள்ளிகளாக வாழ்ந்த இந்திய மக்களாகக் கண்டார்.

"ஆறு லட்சம் வெள்ளையர்கள் 30 கோடிமக்களை ஈன்றெடுத்த பாரததேவியை அல்லற்படுத்தினார்கள்; அவமானப்படுத்தினார்கள். அந்த நேரத்திலே தாய் பிறன் கைப்படச் சகிப்பவர்களாயினர் பாரத மக்கள். விடுதலை வீரர்களைப் போலீசார் தடியால் அடித்தும், தங்கள் பூட்ஸ் கால்களால் உதைத்தும் வீதி வழியே இழுத்துச் சென்றபோது 'என்ன கொடுமையிது' வென்றுசொல்லி வேடிக்கை பார்த்து நின்றார்கள். அது, பாரதியின் நினைவுக்கு வந்து விடுகிறது! அக்கோழை மக்களை 'வீரமிலா நாய்கள்' என்றும் 'நெட்டை மரங்கள்' என்றும் ஏசுகின்றார்! போலீசார் விடுதலை வீரர்களுக்கு இழைத்த கொடுமைகளைக் கண்டபோது, உதட்டளவில் அனுதாபம் சொல்லி மக்கள் புலம்பியதனைப் 'பெட்டைப் புலம்பல்' என்று சொல்லுகின்றார்".

(பாரதியார் பற்றி, பக்கம் 338)

'கண்ணன்' போன்ற தனித்தமிழ் சொற்களைப் பாரதியார் ஆள்வது கண்டு ம.பொ.சி. மகிழ்கிறார். பாரதியார் தமிழர்கள் உறங்கிக்கிடந்ததால், தானுமொரு தாலாட்டுப் பாடவில்லையாம். மாறாக, திருப்பள்ளியெழுச்சியை சிறப்பாகப் பாடினாராம். மேலும், குழந்தைப் பாடல்களில் கனமான சீர்திருத்த எண்ணங்களைப் புகுத்தவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். ம.பொ.சி. பாரதி பாடல்களையும் சிலப்பதிகாரத்தையும் அற்புதமாக இணைத்துக் காட்டுவது இலக்கிய ரசிகர்களுக்கு இன்பம் தருவதாக இருக்கிறது.

பாரதியாரைப் பற்றி எழுதும்போது அறிஞர்கள் தங்களது நோக்கினை அழுத்திக் காட்டுவதைப் பல நூல்களில் காண்கிறோம். சிறந்த பொதுவுடைமைச் சிந்தனையாளர்களான ப. ஜீவானந்தம், நா. வானமாமலை, தொ.மு.சி. ரகுநாதன் போன்றோர் பாரதியாரை ஆழமாகப் படித்து நூல்கள் எழுதியிருக்கின்றனர். அவர்களுக்கு மறுப்பாகத் தோன்றிய நூல்களும் உண்டு. மங்களாவின் எட்டயபுரத்துக்குயில் (1987) இவ்வகையைச் சேர்ந்தது. இதில் பாரதியாரின் பிராமணப் பிறப்பு கடினமாக அலைக்கப்படுகிறது :

"பிராமணராகப் பிறந்ததால் பாரதியின் முரண்பாடுகள், பலவீனங்கள், பிற்போக்குத்தனங்கள் மறைக்கப்பட்டு முற்போக்குச் சிம்மாசனத்தில் ஏற்றி வைக்கப்படுகிறார். இந்த அரியணைக் காட்சியை மட்டும் கண்டோர், அவர் இயக்கவியலை ஏற்றுக்கொண்டவர் என்றும் சோசலிசவாதி என்றும் ஜோடிப்புக்களை தொடர்கின்றனர்."

ரா. அ. பத்மநாபன், பெ.சு. மணி, சீனி விசுவநாதன், இளசை மணியன் போன்றோர் பொறுமையாகப் பாரதியின் நூல்களைத் தேடியும், வரிசைப்படுத்தியும் புத்தகங்கள் வெளியிட்டு வருகிறார்கள். அவை பாரதி பற்றிய சிறந்த ஆவணங்களாகத் திகழ்கின்றன. இந்த வகையில் வி. எஸ். குஞ்சிதபாதத்தின் புதுவையில் பாரதியார் (1982) பல செய்திகளைத் தருகிறது. ஆசிரியரின் தந்தையார் ஸ்வாமிநாத தீட்சிதர் பாரதியாரை அறிந்தவர். பாரதியின் புதுவை நாட்கள், பதஞ்சலி யோக சூத்திர மொழிபெயர்ப்பு, பாரதியின் பெண் விடுதலை எண்ணங்கள் யாவும் இந்நூலில் மிகத்தெளிவாக, உணர்ச்சிகரமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

இதேபோல், பாரதியார் பாடல்கள் அனைத்தையும் அற்புதமாகப்பாடி கேட்போரை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்திய திருலோக சீதாராமின் புதுயுகக் கவிஞர் (1981) பாரதி பற்றிச் செதுக்கப்பட்ட சொற்சித்திரங்களைத் தருகிறது. பல ஆண்டுகளுக்கு முன்னரே ஆனந்த விகடனில் தொடராக வந்த கட்டுரைகள் இன்று எழுதிய பொலிவுடன் மின்னுகின்றன. ஆசிரியர் கூறுவதுபோல் இவை "ஓர் உள்ளத்தின் இன்ப அலைகள்". திருலோக சீதாராமும் ஒரு உன்னத கற்பனாவிலாசக் கவிஞர் (Romantic Poet) என்பதால், அவரது கவிதை உள்ளம் பாரதி கவிதையின் சாரத்தையே இந்நூலில் தருகிறது என்றால் மிகையல்ல.

1982: பாரதி நூற்றாண்டு, அதனால் 1980 இலிருந்தே பாரதி பற்றிய புது நூல்கள், பழைய நூல்களின் புதிய பதிப்புகள் வெளியிடலாயினர். ஹெச். ஆர். கிருஷ்ணனின் பாரதி யுகம் (1980) ஒரு சிறந்த அறிமுகம். ஆசிரியர் அந்தக் கால ஐ.ஸி.எஸ். அதிகாரியாகப் பணியாற்றியவர். ஆங்கில இலக்கியத்தில் திளைத்தவர். அதனால் பாரதியைத் துல்லியமாக எடை போடுகிறார். மேலை நாட்டுக் கவிதைக் கோட்பாடுகளைத் தராசாக உபயோகிக்கிறார். முக்கியமாக மூன்று பொதுப் பண்புகளைப் பாரதியாரிடம் காண்கிறார்:

1. தாயன்பு ஏமாற்றம். சிறு வயதில் தாயை இழந்ததால் பின்னர் அவருடைய மனம் அனுபவித்த பல குழப்பங்களுக்கும் விடை தேடித் தான் இழந்த தாயின் வெவ்வேறு தெய்வீக உருவகங்களாகப் பாரதசக்தி, பராசக்தி, பாஞ்சாலி, லட்சுமி, சரஸ்வதி, காளி முதலியோர் கவியினால் தோற்றுவிக்கப்படுகின்றனர்.

2. மூல மனோபாவம் எதிர்ப்பு. கவிஞரின் மனக்குறை மனித இனத்தின் மனக்குறையாகத் தெரிய, புதிய யுகம் வேண்டுமென்று புரட்சியை இலக்காக வைத்துக்கொள்கிறார்.

3. மனித இனம் படும் பல்வகைத் துன்பங்களை ஒரே வீச்சில் அழிக்கவேண்டுமென்ற துடிப்பு.

பாரதியார் 'Dramatic Monologue' (நாடகத் தனிமொழி) போன்ற புது இலக்கியச் சோதனைகளைச் செய்தார் என்றும் கிருஷ்ணன் குறிப்பிடுகிறார். பாரதியின் வசன கவிதையை 'அல் - யாப்பு - முறை' என்று அழைக்கிறார். சிந்திக்க வைக்கும் ஆய்வு. இந்நூலைப் போலவே, மேலை நாட்டு விமரிசனப் பாணியில் பாரதியின் மொழியைப் பாரதி தமிழ் (1987) ஆய்வு செய்கிறது. ஆய்வாளர்கள் கி. கருணாகரன், வ. ஜெயா அக்கினிக்குஞ்சு, தொண்டச்சி, புரட்சி, பொதுவுடமை, பூழ்தி போன்ற சொற்கள் பாரதியாரால் புதிதாகப் படைக்கப்பட்டவை என்றும், ஜாகப்பை யாகோப்பு என்று தமிழாக்கம் செய்தார் என்றும், பேச்சு வழக்கைத் தரப்படுத்தி எழுத்து வழக்காக்குகிறார் என்றும் (போச்சி - போச்சுது, கண்டுட்டே - கண்டிட்டாய்) ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஆனால் இவர்களது கண்டு பிடிப்புக்கள் மீண்டும் சரி பார்க்க வேண்டிய நிலையில் உள்ளன. உதாரணமாக, பூழ்தி எனும் சொல்லைத் தேவாரத்திலேயே ("கேழல் பூழ்தி கிளைக்க") என்று கையாண்டிருக்கிறார்கள்.

பாரதி ஆய்வுகளில் வா.செ. குழந்தைசாமியின் பாரதியின் அறிவியல் பார்வை (1983) புதிய தடத்தில் செல்கிறது. டாக்டர் குழந்தைசாமி அறிவியல் வித்தகர். பாரதி காலத்தில் தமிழகம் வேளாண்மையுகத்தில் இருந்தது. மேலைநாடுகள் தொழில் யுகத்திற்கு முன்னேறிவிட்டன. பாரதி தனது தாயகமும் அவ்வாறு முன்னேற வேண்டுமென ஆசைப்பட்டார். இந்தியாவின் மூவாயிரம் ஆண்டுப் பண்பாட்டில் பெருமிதம் கொண்டவர்தான் எனினும் வளர்ச்சி வேண்டிப் புதுமைகளை ஏற்க தயாராகவே இருந்தார்:

"காலத்துக் கேற்ற வகைகள் - அவ்வக்
காலத்துக்கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் - எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று இல்லை".

என்றவர் பாரதி. மேலும் முனைவர் குழந்தைசாமி சொல்வதுபோல் பாரதியார் "களத்தில் இறங்கிப் போராடியவர்". பெண்ணுரிமை பேணுவதற்காகச் சமுதாயத்தின் எள்ளலை ஏற்றவர். அனைவருக்கும் கல்வி (Universal Educaztion) வேண்டுமென்று வாதிட்டவர். கல்வியும் வாழக்கையும் இணையவேண்டும் என்றவர். உலகத்துப் புது சாஸ்திரங்களைத் தமிழிலும் உடனுக்குடனே தரவேணுமென்று ஆர்ப்பரித்தவர். முனைவர் குழந்தைசாமி எழுதுகிறார்:

"இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றவேண்டும் என்ற அவரது அறிவுரையைப் பின்பற்றி, ஆண்டுக்கு சராசரி 100 நூல்கள் வெளியிட்டிருந்தால் கூட இன்று சுமார் 7000 நூல்கள் பல்வகையான அறிவுத்துறைகளில் உருவாகியிருக்கும்... இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், நவீன கல்வி உலகம் எங்கோ இருக்கிறது. நமது தாய் மொழி எங்கோ நிற்கிறது. நாம் எங்கு நிற்கிறோம் என்பதைக்கூட முழுமையாகப் புரிந்து கொள்ளாது பலர் தங்கள் விருப்பு வெறுப்பிற்கேற்ப எதையோ உரக்க கூறிக் கொண்டிருக்கின்றனர்".

(பாரதியின் அறிவியல் பார்வை, பக்கம் 90-1)

பாரதி காட்டும் அமரநிலையை புராண வழிகளிலிருந்தும் பிரித்து, ஒரு அறிவார்ந்த கோட்பாடாக விளங்குவதாக ஆசிரியர் கருதுகிறார். இது ஒரு முக்கியமான விமரிசன அலை.

"பாரதியின் உலகம் மக்களுலகம். அது மன்னருலகல்ல. மதகுருக்கள் உலகல்ல. உயர்வுப் பாதை என்றால் அது அனைவரும் செல்லும் பாதையாக இருக்கவேண்டும்."

(பாரதியின் அறிவியல் பார்வை, பக்கம் 111)

இது ஸ்ரீஅரவிந்தர் காட்டிய வழிபோல் உள்ளது. மனிதன் மேன்மையான பரிமாணங்களை அடைய வேண்டும். மாசுக்கள் நீங்கி, தெய்வீக மாற்றலுக்கு உட்படவேண்டும். ஸ்ரீ அரவிந்தர் கூறும் 'மண்ணை விண்ணாகச் சமைக்கலாம்' (Transform life on earth into a life divine) எனும் கோட்பாட்டைப் பாரதியிடம் காண்கிறோம் என்று முனைவர் குழந்தைசாமி பாடலே எழுதிவிடுகிறார்:

"அண்ணாந்து விண்ணுலகைப் பார்த்து பார்த்து
அதுசேரும் வழி தேடி அலைந்த நாட்டில்
மண்ணே நம் சுவர்க்கமெனும் மாற்றம் சொன்னார்
மானிடர்கள் தேவர்களாய் வளர்க என்றான்"

எனக் கூறி மகிழ்கிறார்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலத்திலும் நல்ல ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. K. செல்லப்பனின் Bharati the Visionary Humanist (1973), S. ராமகிருஷ்ணனின் Bharati: Patriot, Poet, Prophet (1982), வை.சச்சிதானந்தனின் Whitman and Bharati (1978) முதலியன பல்கலைக்கழக ஆய்வுக்கூடங்களில் பாரதிக்கு உள்ள ஆளுமையை காட்டுகின்றன. முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் A Comparative Study of Bharati and Vallathol (1991) இரு மாபெருங்கவிஞர்களை இணைத்துக் காண்கிறது. இருவரும் தீ, பறவைகள் போன்ற உருவகங்களை உபயோகிக்கிறார்கள். அதேசமயம் அவர்களது பார்வை வெவ்வேறு விதமாக இருக்கிறது. இருவரும் தேசபக்திக்கவிஞர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், தத்தம் மொழிக்குப் புதுப் பொலிவு தந்தவர்கள். இந்தியப் பண்பாடு எப்படி அற்புதமாக, பலவிதமாக மலர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர்கள்.

முனைவர் ஜான் ஸாமுவேலின் The Harp and the Veena (1993) பாரதி எவ்வாறு ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி வழி செல்கிறார் என்று விளக்குகிறது. இரு கவிஞர்களும் புரட்சி கீதம் பாடியவர்கள். ஷெல்லியின் Prometheus Unbound (விடுதலை பெற்ற பிராமிதியூஸ்) பாரதியின் பாஞ்சாலி சபதம் இரு காவியங்களும் மிகப் பழமையான கதைகள் மூலம் தற்காலத்திற்கு வேண்டிய அறிவுரைகள் கூறுகின்றன. இரண்டுமே புரட்சிக் காவியங்கள். நிலப்பிரபுத்துவத்தை எதிர்க்கும் புரட்சியை ஷெல்லியின்காவியத்திலும், பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்க்கும் புரட்சியைப் பாரதியின் காவியத்திலும் காண்கிறோம்.

ராஜம் கிருஷ்ணனின் பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி (1983) பாரதி விமரிசன நூல்களில் சற்று வித்தியாசமானது. பாரதியைப் பெண்ணியத்திற்குப் பெரும் கவிஞராகக் கொள்கிறோம். அவரைப்போல் பெண் இனத்திற்குப் பரிவு காட்டியது மிகச்சிலரே.

யதார்த்த வாழ்க்கையில் அவரால் பெண்மையை எப்படிப் போற்ற முடிந்தது? எவ்வாறு ஏமாற்றங்களை எதிர்க்கொண்டார்? எப்படிச் சமூக விழிப்புணர்வு வீரராகத் திகழ்ந்தார்? அனைத்திற்கும் பாரதியாரின் மனைவி செல்லம்மாவைக் குருத்துவ கேந்திரமாக அமைத்து ராஜம் கிருஷ்ணன் இந்த வரலாற்றை எழுதி இருக்கிறார். பாரதியின் வாழ்க்கைச் சூழல் உண்மைக்கு மாறுபடாத கற்பனை உரையாடல்களாக உருவம் பெறுகிறது.

"இப்படி காசைக் கரியாக்குவீர்களா? நான் அரையணா தேங்காய் வாங்கக்கூடக் கணக்கு பாத்துண்டு இருக்கேன். நாளைக்கு போது விடிஞ்சா மணியரிசி இல்லேங்கற நிலமையிலே இருக்கறப்ப மூணுருபாய்க்கி வண்டி கீரையை வாங்கிண்டு வந்திருக்கிறீரே!"

"என்னடீ பணம் பணம்னு புலம்பறே? பராசக்தி குடுப்பாள்!"

"குடுப்பள்! இடுப்புத்துணிய பிச்சக்காரங்கிட்ட அவுத்துக் குடுத்துட்டு வாச ரேழில கோமணத்தோட நின்னுண்டு செல்லம்மான்னு கூப்பாடு போடுவீர்! நான் என் தலைவிதிய எங்கே போய்ச் சொல்லிஅழ?

(பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி, 363)

செல்லம்மாள் இந்நூலில் ஒரு வீரையாக வாழ்கிறாள். ஆனால் அவளையும் சநாதனிகள் குளவி போல் கொட்டிக் கைம்மைக் கோலத்தை ஏற்க வைத்தனர் என்ற கொடுமையைக் கூறி, ஆசிரியை பெண்ணினத்திற்குத் தைரியம் சொல்லி நூலை முடிக்கிறார்:

"பாரதி! பெண்குலத்துக்குப் பேரருளாளனாக இந்த மண்ணில் உதித்து, இம்மண்ணை விண்ணுக்கு உயர்த்திய மாகவிஞனே! உன்னுடைய பாஞ்சாலியின் சபதம், நீ வாழ்ந்து மறைந்து அறுபதாண்டுகளுக்கு மேல் ஆகியும் இனனும் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் உன்னுடைய பாஞ்சாலியின் வீர உரைகள் உலகெங்கும் கொடுமையை அழிக்கப் பல்லாயிரக் கணக்கான பாஞ்சாலிகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

நீ கனவு கண்ட புதுமைப் பெண்கள் இந்நாள் புதிய பெண்ணறத்தையும் புதிய சமுதாய நெறியையும் நிலை நாட்டப் புன்மைகளிடையே எதிர் நீச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்."

(பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி, பக்கம் 636)

இருபதாவது நூற்றாண்டின் பிற்பகுதி பாரதி மொழிபெயர்ப்புக் களஞ்சியமாகவும் ஆயிற்று. அனேகமாக அனைவருமே நான் அறிந்தவர்கள், சிறந்த அறிஞர்கள், ஆங்கில மொழி வல்லுனர்கள். பேராசிரியர் பி.எஸ். சுந்தரம் தமது Poems of Subramania Bharati (1982) யை எனக்குப் பரிசளித்தபோது "To Prema my much younger predecessor in this line from Sundaram Mama" என்று நூலில் எழுதியபோது நெகிழ்ந்து போனேன். திருலோக சீதாராமின் பாரதி புகழ் பரப்பும் சீடனான தி.ந. ராமச்சந்திரன் பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, விநாயகர் நான்மணிமாலை முதலிய பாடல்களைச் சிறப்பாக மொழிபெயர்த்து விரிவான குறிப்புகளுடன் வெளியிட்டார். கே.ஜி. சேஷாத்ரி சக்திப்பாடல்களையும், பி.ராஜா வசனகவிதையையும் மொழிபெயர்த்துள்ளார்கள். இந்தியில் ரவீந்திர சேத் மற்றும் ஹா.கி. வாலம்; வடமொழியில் ஸ்ரீராம தேசிகன் தெலுங்கில் ஸி. ஆர். சர்மா எனப் பல்வேறு இந்திய மொழிகளிலும் பாரதியார் பாடல்கள் வெளிவரலாயின. தஞ்சைப் பல்கலைக்கழகம் பாரதியாரது பாடல்களை ஆங்கில மொழிபெயர்ப்பில் வெளியிட்டிருக்கிறது.

1994 இல் ஆ.இரா. வேங்கடாசலபதி பாரதியின் கருத்துப் படங்கள் இந்தியா 1906 - 1910 எனும் அற்புதமான பிரசுரத்தைப் பாரதி அன்பர்களுக்குப் பரிசளித்திருக்கிறார். கருத்துப்படங்களைப் (cartoons) பத்திரிகையில் வெளியிடுவதற்குப் பாரதியாரே முன்னோடி என்பதை இப்பிரசுரம் அறிவிக்கிறது. மேலும் பாரதி பற்றிய கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைத் தொகுதிகளும் இந்நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிவந்துள்ளன. ஒரு சிறப்பு உதாரணம்: டாக்டர் சிற்பி பாலசுப்பிரமணியம் பதிப்பித்துள்ள பாரதி என்றொரு மானுடன் (1997).

நிறைவாக, பாரதியாரைப் பற்றிய கற்பனை இலக்கியம். ராஜம் கிருஷ்ணன நாவல் வடிவில் பாரதி வரலாறு எழுதியது போல் ஆதவன் அவர்கள் புழுதியில் வீணை (1988) எனும் நாடகத்தை எழுதியிருக்கிறார். பாரதியின் பாடல் வரிகளையே உரையாடல்களுக்கும், பின்னணிக்கும் அதிக அளவில் உபயோகித்து, பாரதியின் புதுவை நாட்களை நம்முன் கொண்டு வரும் இலக்கியச் சுரங்கமான நாடகம். பாரதியை நேரில் பார்ப்பது போன்ற யதார்த்தம் (realism). வேத ரிஷிகளின் கவிதைகளை ஸ்ரீஅரவிந்தருடன் படித்து, அற்புதமான மந்திரக் கவிதைகள் தந்த பாரதியைக் காணும் போது இந்தியாவின் ஆன்மீக ஒளி தரிசனம் கிடைக்கிறது.

"வேதத்தின் பொருளைத் தேடுகிறேன்.. அரவிந்த பாபுதான் எனக்கு வழிகாட்டி" என்று கூறும் பாரதி "வேதத்தின் பொருள் அன்புதான்" எனும் பொன்னான கோட்பாட்டைச் செப்புகிறார். அக்நி.தேவனான ஆன்ம சக்தி (Spiritual will - power) ஓங்குகிறது.

பாரதியாரின் பாடல்களைப் படிப்பதே ஒருவேள்விதான். இந்த வேள்வியில் பங்கு பெற்றால் வாழ்க்கையில் ஆனந்தமும் அன்பும் ஒளிர்வதை நான் அனுபவித்திருக்கிறேன் என்று கூறி விடை பெறுவேன்:

"வானகத்தைச் சென்று தீண்டுவ னிங்கென்று
மண்டி யெழுந்தழலைக் - கவி
வாணர்க்கு நல்லமுதை - தொழில்
வண்ணம் தெரிந்தவனை - நல்ல
தேனையும் பாலையும் நெய்யையுஞ் சோற்றையும்
தீம்பழம் யாவினையும் - இங்கேயுண்டு
தேக்கிக் களிப்பவனைப் - பெருந்திரள்
சேர்ந்து பணிந்திடுவோம் - வாரீர்".

ஆங்கில மேற்கோள் விளக்கம்:

1. "ஒரு தேசபக்தனாக, கவிஞனாக வாழ்ந்து மடிந்த ஒரு மாவீரன். அவன் மடிந்தபோது, புதுயுகத்திற்கு அவன் தன் முத்திரை பதித்துத் தன்னை ஏற்கனவே வழங்கி இருந்தான். புதுயுகத்தின் புத்தியக்கத்தின் சக்தியாக இருந்தான். பாரதியின் மாபெரும் யுகம் இன்றும் நிகழ்காலத்தில் பொங்கிவழிகிறது".

2. " நவீன முயற்சிகள் தமிழுக்குப் பொருந்தாது என்று சொல்லும் அறிவார்ந்த நண்பர்கள் பலர் இருக்கிறார்கள். ஏனெனில் ஏற்கனவே தமிழ் இலக்கண மரபில், செய்யுள் ஆக்க விதிகள் பற்றி, நீண்ட காலத்திற்கு முன்பே, எல்லாக் காலத்துக்குமான ஒரே மாதிரியான, உள்ளடக்கம், முறைகள் மற்றும் நடை குறித்து வரைவிலக்ககணப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், மனித இன வளர்ச்சி வரலாற்று முறை சார்ந்து பார்க்கும்பொழுதும் ஆங்கில இலக்கியத்தின் தாக்கப் பின்னணியில் இலக்கணக் கட்டுக்குள் இறுக்கமாக உள்ள தமிழிலும் புதிய யுகத்திற்கு ஏற்பு விலைமதிப்பற்ற புதிய செல்வங்களைப் பெருக்கிக் கொள்ளலாம் எனலாம்".

3. "ஆங்கிலக் கவிதை எல்லா வர்க்க மக்கள் மீதும் கொண்டிருக்கும் தாக்கத்தோடு ஒப்பிடும்போது, பழமையான தமிழ் அதன் புனிதமான முறையற்ற செயல்பாடுகளில் தோற்றுவிடுவதுபோல் தோன்றுகிறது. பெரும்பாலும் தமிழ் தேர்ந்த சிலராலேயே புகழப்படுகிறது. அது தமிழ்நாட்டின் மாபெரும் மக்கள் திரளின் வாழ்வோடு, மனதோடு, இதயங்களோடு கலக்க முடியுமா, முடியாது என்றே தோன்றுகிறது. இதற்குக் காரணம் தமிழ்ப்பழம் செய்யுள் மரபு அதன் எல்லாவகையான சிறப்புகளோடு பெருமை பெற்றிருந்தாலும் பழமையில் உள்ள எளிமையின்மையும் மக்கள் திரளின் தேவைகளுக்கு ஏற்பப் பொருத்தமுறாத நிலையில் இருப்பதுவே காரணம் எனலாம்".

4. "பத்திரிகைச் சட்டத்தின் கீழ் கனவு, ஆறில் ஒரு பங்கு ஆகிய இரண்டையும் நான் தடைசெய்யுமாறு பரிந்துரைக்கிறேன். இவற்றில் முன்னதன் நடை வெளிப்படையாகவே அரசுக்கு எதிரானதாக இருக்கிறது. இரண்டாவது புத்தகத்தின் நோக்கமும் அதுவாகத்தான் இருக்கிறது. இரண்டும் பாண்டிச்சேரியைச் சேர்ந்த சி. எஸ். பாரதி என்பவரால் எழுதப்பட்டுள்ளன. அங்கிருந்தே வினியோகமாகின்றன. இவை திருநெல்வேலி வழக்குச் சார்ந்த தேடலின் போது கைப்பற்றப்பட்டுள்ளன." குற்றம் சாட்டப்பட்டுள்ள சிலரது வீடுகளில் கண்டெடுக்கப்பட்டன. இவை அதிக அளவில் விற்பனை ஆவது போல் தெரிகிறது.

5. "இந்த நூற்றாண்டின் இந்திய தேசிய எழுச்சி பற்றிய தென்னிந்தியாவின் கவித்துவ உணர்ச்சி வெளிப்பாடாக சுப்ரமணிய பாரதியார் இருந்தார். மக்களின் அன்பால் தமிழின் புதிய முதல் கவிஞனாக அவர் முடிசூட்டப்பட்டிருந்தார். அவருடைய பாடல்கள் இளைஞர்களாலும், முதியவர்களாலும், வீடுகளிலும், பொதுக்கூட்டங்களிலும் பாடப்பட்டன. சாதி, மதம் ஆகிய பிரிவுகளைத் தாண்டி எல்லாருடைய மனங்களையும் பிணிக்கும் ஆற்றல் வாய்ந்ததாக இருந்தன. அவர் ஒரு பிராமணன். ஆனால் அவரிடம் சமத்துவ உணர்வு எல்லாச் சூழல்களிலும் எல்லா எழுத்துக்களிலும் ஊடுருவி நிற்கிறது. எல்லாச் சாதியினருக்கும் ஆண், பெண் இருவருக்கும் உரிய சுதந்திரமும் சமத்துவமுமே அவருடைய ஆன்மப் பசியாகும். மற்றும் இவையே அவருடைய பாடலுக்குரிய உள்ளெழுச்சி மூலமும் ஆகும். பழங்காலத்தின் இறுகிப்போன வடிவம், சிந்தனை ஆகியவற்றிலிருந்து துணிச்சலாக முறித்துக் கொண்டு வெளியே வந்து பேச்சு மொழியையும் நாட்டுப்புற இசையையும் பாரதி புதியதாக இணைவு செய்து கொண்டார்".

6. "பாரதியைப் போன்ற கவித்துவ இதயம், தாய்மொழிக்கும் மேலாகச் சென்று அயல் மொழியிலும் தன்னை வெளிப்படுத்தியுள்ளது. அனுபவ வெளியீட்டு நிலையில் கலை என்பது மிக முக்கியமான சிந்தனைக்கு உரியதாக அமைகிறது. தன் அனுபவ வெளிப்பாட்டின் மிக உயர்ந்த நோக்கம் என்பது கலையில் தன்னை அறிதலாகவே அமையும். மிக ஆழ்ந்த, புனிதம் சார்ந்த இந்தத் தேடல் என்பது எல்லாப் பாடல்களிலும் காணப்படுகிறது."

7. இந்தியாவின் அரசியல் வளர்ச்சிப்போக்கில், நெருப்பெனக் கனன்ற ஒரு காலகட்டத்தில் பாரதி கவிதை பாடினான். அயல்நாட்டவர் ஆட்சியில் முடிவற்ற அடிவானத்தின் ஒருபுள்ளிபோல யாவும் தோன்றின. மகாத்மா காந்தி அரசியலுக்குள் தோன்றியது இந்த முடிவற்ற அடிவானக் காலத்தில்தான் என்பதில் சந்தேகமில்லை. அதுநிகழ்ந்த போது பாரதியின் முடிவு நேர்ந்தது. பாரதியின் பாடல்களில் ஊடிழையாக அமைந்த தேசியச் சிந்தனை, மகாத்மா காந்திக்கு முந்திய காலச் சிந்தனையே. விவேகானந்தர், தாதாபாய் நவரோஜி மற்றும் திலகர் கால இந்தியாவின் சிந்தனையாகும். அது, இன்று, இந்தியாவின் போராட்டம் குறித்துப் புகழ்வோர் மனதில் இருக்கும் சிந்தனை அல்ல"

8. ஒரு காலம் அல்லது யுகத்தில் ஒரு கவிஞனின் குறிக்கோளைப் பாரதி நிறைவு செய்துள்ளார். இனிய, பொங்கும் வார்த்தைகளில் மட்டும் அவர் அழகைப் படைத்திருக்கவில்லை; நாட்டுச்சேவை - புதிய சுதந்திர வேட்கை உணர்வை ஆண்கள் - பெண்களின் இதயங்களில் தூண்டி எழுப்பியிருக்கின்றார். பாரதியைப் போன்ற கவிஞர் குறிப்பிட்ட எந்த மாநிலத்திற்கும் மட்டும் உரியவர்களல்ல; தன்னுடைய அறிவாற்றலாலும், பணியாலும், அவர், இனம் தேசம் மொழி என்ற எல்லைகளைக் கடந்து உயர்ந்து நிற்கின்றார். மனித குலத்தின் பொதுஉடைமையாகிறார்"

9. இந்நூலின் மிக்குயர் மதிப்பு தமிழ்நாட்டு மக்களுடையது மட்டுமல்ல; இந்தியாமீது ஆர்வம் கொண்டோர் அனைவர்க்கும், சுதந்திரப்போராட்ட வீரர்களை மதிப்போர் அனைவர்க்கும், அவர்கள் எங்கே இருந்தாலும் மற்றும் முதல்தர இலக்கியத்தை நாடும் அனைவர்க்கும் உரியது. பாரதியைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள இது உதவும்.

10. ஒரு கவிஞன் உரைநடையைப் பயன்படுத்தும் முறையில் பல்வகை உள்நோக்கம் கொண்ட கற்பனையும் விநோதமும் இருக்கும். சிறிய தேவதைகதைகள், உருவகக்கதைகளிலிருந்து சிறுகதைகள் வரை பாரதி பலவகையான வடிவங்களைக் கையாண்டு தனக்கே உரித்தான தனிமுத்திரை பதித்துள்ளான். அவற்றுள் தலையாயது ஞானரதம் Pilgrimis Progress, The Divine Comedy போன்ற படைப்புக்களின் சாரங்களடங்கிய, மண்ணுக்கும்விண்ணுக்குமான பாரதியின் இயக்கத்தை இதில் காணலாம். கனவுத்தன்மை கொண்ட கவித்துவ மனோபாவத்தின் அடையாளங்களை இப்படைப்பில் காணலாம்"

11. வடக்கே மறைவுற்றிருந்த காலத்தில் தெற்கே சமஸ்கிருதம் சொந்த வீட்டு வரவேற்பைப் பெற்றிருந்தது. மிகவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாக இந்துக்கலை மற்றும் சிந்தனையில் காணப்படும் செவ்வியல் மருவிய மற்றும் வேதமருவிய காலத்தில், திராவிட அறிவாற்றல் சமஸ்கிருதத்துடன் பொருந்திக் கொண்டதுதான் ஆகும். காலங்காலமான இந்த இணைவு அறியாமையாலோ வெறியாலோ முறிவுபட்டால், இதனால் தமிழகத்திற்கோ அல்லது இந்தியாவிற்கோ எந்திவித இலாபமுமில்லை.

12. "அன்புள்ள ஐயா, தங்கள் மகளின் நூல்களை அண்மையில் நான் பெற்றுவருகிறேன். இப்போது அவற்றை நல்ல ஆக்கம் எனக் கூறமுடிகிறது என்னால். அயலவர்க்கு இரும்புத் திரைவிலக்கி, பாரதியைக் காட்டும் நல்ல காரியம். மேலும், மொழிபெயர்ப்புகள் சிறப்பாக இருக்கின்றன. நான் பிரேமாவைப் பாராட்டுகிறேன்".

உண்மையுள்ள சி. ராஜகோபாலாச்சாரி

13. மேற்குநாடுகளைப் பொறுத்தவரை, வெற்றிக்கான கோஷங்கள் முழக்கங்கள் இட்லர் முசோலினியோடு மாய்ந்துபோயின. செயல் நோக்கிய இந்தஅணுகுமுறைகள், தொலைக்காட்சி இல்லாத பொதுமக்களுக்குரிய தகவல் தொடர்பு முறையாக இருக்கலாம். அமெரிக்க ஐரோப்பியத் தொலைக்காட்சிகள் போரின் பெருமையின்மையையும் அதன் இரத்தவெறி, சிசுக்கொலை பற்றி நிறையவே சொல்லியுள்ளன. ஜெய பாரதம் 19ம் நூற்றாண்டுக்குரியது.

14. இது உங்களுக்கு வியப்பளிக்கலாம். ஆனால் இன்றும், இந்தக் கவிதைகள் பாடப்படும்போது மக்கள் ஆழ்ந்த முறையில் தூண்டப்படுகிறார்கள்; குறிப்பாக சக்திமிக்க நாடக மேதைகளால் இது நிகழ்கிறது. இதற்குக் காரணம், இந்த இலட்சியமானது இழந்துபோன சொர்க்கமாக மக்களால் கருதப்படுவதால் இருக்கலாம். சுதந்திரத்திற்குப் பிந்திய இந்திய அரசியல்வாதிகளின் போக்கினால் இது இவ்வாறு உணரப்படலாம்.

துணை நூற்பட்டியல்

ஆங்கிலம்

1. Bharati, C. Vijaya, C. Subramania Bharati (Publications Division, New Delhi 1972)

2. Subramania Bharati Personality and Poetry (Munshiram Manoharlal. New Delhi. 1975)

3. Agni and other poems and Translations (Bharati Prachur Alayam, Madras. 1937)

   Essays and other prose fragments (Bharati Prachur Alayam, Madras. 1937)

4. Chellappan, K., Bharati The visionary humanist (Chemmeen Publishers, K.K.Nagar, Madras. 1984)

   Gopala - Krishna - Raghavan (Trs.) Chandrika Katha (Zamin Raitu, Nellore - 1. 1971)

5. Gopalan Shastri, R. The Mahakavi and the Mahayogi (Spectra, Madras. 1982)

6. Iyengar, K.R. Srinivasa Indian Writing in English (Sterling Purblishers Private Limited, New Delhi, 1983)

7. Kailasapathy, K. On Bharati (New Century Book House Private Limited, Madras. 1988)

8. Kottoor, Gopi Krishnan. Fire in the soul: A play on Subramania Bharati (India Book House, Madras. 1995)

9. Mahadevan, P. Subramania Bharati: Patriot and Poet (Atri Publishers,

10. Nandakumar, Prema. (Tr.) — Bharati in English Verse (Porunai, Madras. 1958) One-Sixth (All India Books, Pondicherry, 1987)

11. Nandakumar, Prema. — Bharati (MIL Series, Sahitya Akademi, New Delhi, 1978)

12. Subramania Bharati (National Book, New Delhi. 1968)

13. Subramania Bharati (Rao & Raghavan, Mysore. 1964)

14. Parthasarathi, J. — Bharati'ss Longer Poems (Bharati Tamil Sangham, Calcutta. 1982)

15. Rajagopalachari, C. (Tr.) — Bharati - the Tamil Poet (Bharati Tamil Sangham, Calcutta. 1979)

16. Raja, P. (Tr.) — The Sun and the Stars (Akaram, Sivaganga. 1982)

17. Ramachandran, T.N. (Tr.) — The oath of Draupadi (T.R.N. Memorial Library and Publications, Thanjavur. 1982)

18. Ramachandran, T.N. (Tr.) — Kannan Pattu Parts 1 & 2 (T.R.N. Memorial Library and Publications, Thanjavur. 1982)

19. Ramachandran, T.N. (Tr.) — Vinaayakar Naan Mani Maalai (T.R.N. Memorial Library and Publications, Thanjavur. 1980)

20. Ramachandran, T.N. (Tr.) — Kuyil Pattu (T.R.N. Memorial Library and Publications, Thanjavur. 1980)

21. Sachidanandan, V. — Whitman and Bharati A Comparative Study (Macmillan. Madras. 1978)

22.	Samuel, John G.	The Harp and the Veena (Institute of Asian Studies, Madras. 1993.)
23.	Sarma, Challa Radhakrishna.	Tamila Sahithyam Bharati Kavitha (Yuva Bharati, Secunderabad - 3. 1982.)
24.	Seshadri, K.G. (Tr.)	Shakti and Other Poems (T.R.N. Memorial Library and Publications, Thanjavur. 1983.)
25.	Seshadri, K.G. (Tr.)	Prose Poems of the Mahakavi (T.R.N. Memorial Library and Publications, Thanjavur. 1984.)
26.	Seshadri, T. (Tr.)	Bharatiyar Kavithaigal (Bhavana Vani Trust, Lucknow. 1984.)
27.	Seth, Ravindra Kumar.	Subramania Bharati (Sahitya Shodh Sansthan, Karol Bagh, New Delhi - 5. 1982.)
28.	Srinivasan, M.	Bharati the Path - Finder (Kurinji, Calcutta. - 29. 1994.)
29.	Srinivasa Raghavan, A. (Ed.)	The Voice of a Poet (Bharati Tamil Sangham, Calcutta. 1951.)
30.	Sundaram, P.S. (Tr.)	Poems of Subramania Bharati (Vikas Publishing House Pvt. Ltd. Delhi. 1982.)
31.	Swaminathan, K. (Ed.)	Subramania Bharati : Chosen Poems and Prose (The All - India Subramania Bharati Centenary Celebrations Committee, New Delhi. 1984.)
32.	Valam, Ha. Ki. (Tr.)	Panchali Ki Sapath (Mohana, Calvivaru Street, Madras. 1977.)

தமிழ்

1. ஆதவன், புழுதியில் வீணை, தாகம், சென்னை, 1988.

2. இராமையா, பி.எஸ், பாஞ்சாலிசபதம்: நாடகம், வானதி பதிப்பகம், சென்னை, 1982.

3. இராஜம் கிருஷ்ணன், பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1983.

4 இராஜகோபாலன் , கு.பா, - சுந்தரராஜன். பெ.கோ., கண்ணன் என்கவி, சுதந்திர சங்கு காரியாலயம், சென்னை, 1937

5. இளசைமணியன் (பதி), பாரதி தரிசனம், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, 1986.

6.கரிச்சான் குஞ்சு, பாரதியார் தேடியதும் கண்டதும், வானதி பதிப்பகம், சென்னை, 1982.

7. கருணாகரன், கே. - ஜெயா. வீ, பாரதி தமிழ், மாணிக்கவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1987.

8. கிருஷ்ணன், எச், ஆர், பாரதியுகம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1980.

9. குஞ்சிதபாதம், வி.எஸ், புதுவையில் பாரதியார், லோக்சேமா டிரஸ்ட், சென்னை, 1982.

10. குழந்தைசாமி, வா.செ, பாரதியாரின் அறிவியல் பார்வை, பாரதி பதிப்பகம், சென்னை, 1983.

11. சிற்பி பாலசுப்ரமணியன் (பதி), பாரதி என்றொரு மானுடன், கோலம், பொள்ளாச்சி, 1997.

12. சிவஞானகிராமணி, ம.பொ, பாரதியும் ஆங்கிலமும், இன்பநிலையம், சென்னை, 1961.

13. சிவஞானகிராமணி, ம.பொ, பாரதியைப் பற்றிய ம.பொ.சி பேருரை, பூங்கொடிப் பதிப்பகம், சென்னை, 1983.

14. சுப்புரெட்டியார், ந, பாஞ்சாலி சபதம் ஒரு நோக்கு, சர்வோதய இலக்கியப்பண்ணை, சென்னை, 1982.

15. சுப்பிரமணியம், புத்தனேரி, பாரதி ஒரு நெருப்பு, சென்னை, 1981.

16. சுப்பிரமணியம். எஸ்.வி, பாரதியார் வாழ்க்கைக்கொள்கைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982.

17. சுப்ரமணிய பாரதி கட்டுரைகள், இன்பநிலையம், சென்னை, 1963.

18. சுந்தரம். பி.எம், பாரதியார் வரலாறும் கவிதையும், ஓரியெண்ட் லாங்மெண், சென்னை, 1954.

19. தங்கம்மாள் பாரதி, அமரன் கதை, புதுப்புனல் பதிப்பகம், திருச்சி, 1960.

20. திருலோக சீதாராம், புதுயுகக் கவிஞர், சென்னை, 1991.
21. தூரன். பெ, (பதி), பாரதி தமிழ், இன்பநிலையம், சென்னை, 1963.
22. பத்மநாபன், ரா.அ, சித்திர பாரதி, பாரதியார் சங்கம், சென்னை, 1982.
23. பொன்னம்மாள், ஆர், எட்டையபுரத்துத் தங்கம், வானதிபதிப்பகம், சென்னை, 1982.
24. மங்களா, எட்டையபுரத்துக்குயில், ரஞ்சிதம் பதிப்பகம், புதுக்கோட்டை, 1990.
25. மணி, பெ.சு, பாரதி இலக்கியத்தில் வேத இலக்கியத்தின் தாக்கம், பூங்கொடிப் பதிப்பகம், சென்னை, 1998.
26. முத்துக்கண்ணப்பன், டி, பாரதியும் சமயமும், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, 1990.
27. விஸ்வநாதன், சீனி, பாரதியின் கண்டறியப்பட்ட புதிய கட்டுரைகள், சென்னை, 1994.
28. – – – பாரதி நூல்கள் விவரக்கோவை, பாலாஜி புத்தக நிலையம், சென்னை, 1987.
29. – – – காலவரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், சென்னை, 1998.
30. – – — (பதி), பாரதியார் கவிதைகள், சென்னை, 1991.
31. – – — (பதி), மகாகவி வரலாறு, சென்னை, 1996.
32. – – — (பதி), மகாகவிபாரதி, சில புதிய உண்மைகள், சென்னை, 1986.
33. – – — (பதி), பாரதி நூல்கள் பதிப்பு, சென்னை, 1989.
34. – – — (பதி) பாரதியின் பத்திரிக்கை உலகம், சென்னை, 1993.
35. – – — (பதி) பாரதியின் கட்டுரைச் செல்வம், சென்னை, 1989.
36. வெங்கடாசலபதி, அ.இரா, பாரதியின் கருத்துப்படங்கள்: இந்தியா, 1906 - 1910, நர்மதா பதிப்பகம், சென்னை, 1994.
37. ஜெயகாந்தன், பாரதி பாடம், கலைஞன் பதிப்பகம், சென்னை, 1976.
38. பி.ஸ்ரீ, பாரதி: நான் கண்டதும் கேட்டதும், ஸ்டார் பிரசுரம், சென்னை, 1970.

* * * * * * * * * * * *

"பாரதீயார் தோன்றியிருக்காவிட்டால் தமிழ் புத்துயிர் பெற்றிருக்காது. கண்ணனைப் பற்றி பாடினாலும் சரி சிட்டுக்குருவி பற்றி பாடினாலும் சரி, காளியின் ஊழிக் கூத்தில் மெய் மறந்தாலும் சரி, சொல்லும் பொருளும் ஒருங்கிணையும் சித்து பாரதியின் கவிதையில் நடக்கிறது அவரால் நவரசங்களையும் இயற்கையாக வெளிப்படுத்த முடிகிறது".